# பொருளடக்கம்

முகவுரை ........................................................................ 52

நிறைவேற்று அறிக்கை........................................................................ 53

அறிமுகம் ........................................................................ 54

முதியோர்களுக்கான தேசிய செயலகம்........................................................................ 55

தொலைநோக்கு........................................................................ 55

பணிக்கூற்று........................................................................ 55

நிறுவன கட்டமைப்பு ........................................................................ 56

முதியோர்களுக்கான தேசிய சபை - 2011........................................................................ 57

முதியோர்களுக்கான தேசிய சபைத் தவிசாளரின் அறிக்கை ........................................................................ 58

முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை........................................................................ .60

2011 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திறன்……………………………………………………..61

முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலுக்காக நிதியுதவி வழங்கல்……………………………...61

நடமாடும் சேவைகள் மூலம் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விபரம்…………...62

கிராம மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.5,000/= நிதியதவி........................................................................ 63

பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/= நிதியுதவி........................................................................ 64

நிதி உதவி வழங்கப்பட்ட பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் ........................................................................ 65

ஓய்வு பெற இருப்பவர்களுக்கான நிகழ்ச்சி ........................................................................ 66

உளவியல் ஆலோசனை நிகழ்ச்சி........................................................................ 66

முதியோருக்கான குடும்ப உறைவிட நலனோம்பல் சேவை ........................................................................67

முதியோர்களுக்கான பாதுகாப்புத் திட்டம் ........................................................................ 68

சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்……………………………………………………72

முதியோர்களுக்கான பராமரிப்பு சபை……………………………………………………………73

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை ........................................................................ 75

2010 மார்கழி 31ம் திகதிய நிதி நிலைக் கூற்று........................................................................ 76

2010 மார்கழி 31 ம் திகதிய நிதி செயற்திறன் கூற்று........................................................................ 77

2010 டிசம்பர் 31 திகதிய பணப்புழக்கக் கூற்று........................................................................ 78

மேலதிக பட்டியல்கள் ........................................................................ 79

கணக்காளர் நாயகத்தின் அபிப்பிராயம் ........................................................................ 82

கணக்காளர் நாயகத்தின் அறிக்கை…………………………………………………………..........83

கணக்காளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்……………………………………………......96

# முகவுரை

சமூக சேவை அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள முதியோர்களுக்கான தேசிய சபையினால் 2011ம் வருடத்தில் அடைந்த செயலாற்றலின் மட்டத்தினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறியத் தரும் பொருட்டு இவ் வருடாந்த அறிக்கை எங்களின் சகல சக்திகளும் ஒருங்கிணைக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் முதியோர் சமூகத்தின் நலனோம்பலை கருத்தாகக் கொண்டு முதியோர்களக்கான தேசிய சபையின் கொள்கைத் தீர்மானங்கள், இலக்குத் திட்டங்களின் படி இச் சிறந்த சேவை வழங்கப்பட்டுள்ளது.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முதன்மைப் பணி, 2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க சட்டத்தின் படி முதியோரின் சுதந்திரம், அவர்களின் சமூக ஈடுபாடு, பாதுகாப்பு, சிறப்பு ஆகியனவற்றினைப் பாதுகாத்தலாகும்.

2011ம் வருடத்தில் முதியோர் சமூகத்திற்கு அதிக வெற்றிகரமான சேவைகளை நடத்த முடிந்தது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இச் சாதனையை விசேடமாக தற்போதைய அரசினது எதிர்பார்ப்புக்களையும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் மீதுள்ள கடமைகளையும் நன்கு அறிந்து, அதன்படி கருமமாற்றியதன் விளைவாக எம்மால் அடைய முடிந்தது.

மேலும் மகிந்த சிந்தனையில் விபரிக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு ஏற்ப இலங்கையினை ஒரு அதிசய மிக்க நாடாக உருவாக்க முதியோர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலே எமது நோக்கமாகும்.

# நிறைவேற்று அறிக்கை

இலங்கையின் பெரும்பான்மையான முதியோர்கள் தற்பொழுதும் கிராமப் புறச் சூழலில் வாழ்கின்றார்கள். அவர்கள் முகம் கொடுக்கும் சமூகப், பொருளாதார பிரச்சினைகளை இனம் கண்டு, அவர்களின் மனோரீதியான, சமூக, ஆன்மீக நிலைமைகளை முழுமையாக விருத்தி செய்யக் கடுமையாக உழைப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

இதன் காரணமாக, 2011ம் வருடத்தில் பெருமளவிலான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. மஹிந்த சிந்தனையில் விபரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்ப, இலங்கையில் முதியோர் குடியினரை மேலும் மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தினைத் திட்டமிட்டு, அமுலாக்குவது, இவைகளுள் பெரும் சவாலாகவிருந்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களின் முதியோரின் சேமநலன்களையும் கூட அடிக்கடி கவனிக்க வேண்டியிருந்தது. இம் முக்கிய பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கௌரவ சமூக சேவைகள் அமைச்சர், கௌரவ சமூக சேவைகள் பிரதி அமைச்சர், அம் அமைச்சுப் பணியாளர்களினதும் வழிகாட்டல்கள் மிகவும் பாராட்டத் தக்கன. மேலும் இலங்கையில் முதியோருக்கு சிறந்த சேவைகளை அளிப்பதற்கு சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர், பணியாளர்கள், முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணியாளர்கள் ஆகியோரினால் வழங்கப்பட்ட உதவிகளையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

2011ம் வருடத்தில் பௌதீக, நிதி இலக்குகளைத் திட்டமிட்டவாறு எல்லோரினதும் அர்ப்பணம், விடாமுயற்சி, ஆற்றலினால் அடைய முடிந்தது. எமது செயற்பாடு தொடர்பான தகுந்த தகவல்கள் தொடரும் பக்கங்களில் தரப்படும்.

# அறிமுகம்

கடந்த பல வருடங்களில் இந் நாட்டில் ஏற்பட்ட முறைமையான சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, போசாக்கு மற்றும் கல்விப் பகுதிகளில் முறைமையான வளர்ச்சி அடையப்பட்டுள்ளது. இது பிறப்பு வீதத்தினைக் குறைவடையச் செய்ததுடன், ஆயுள் காலத்தினை அதிகரிக்கவும் செய்துள்ளது. இதன் காரணமாக இந் நாட்டின் முதியோர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே நாட்டின் முழச் சனத் தொகையிலும் தற்பொழுது 10% மாகவுள்ள முதியோர் சனத்தொகை, அடுத்த பத்து வருடங்களில் 17% மாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இலங்கையிலுள்ள முதியோரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் நோக்கமாகக் கொண்ட சேமநல வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோர்களுக்கான தேசிய செயலகம் பூரண அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. முதியோர் சமூகத்தினைப் பலப்படுத்துவதற்காக 2011ம் வருடத்தில் அநேகமான நடவடிக்ககைகள் எடுக்கப்பட்டன. இந் நடவடிக்கைகளில் கிராமிய முதியோர் குழக்கள், பிராந்திய முதியோர் சபைகள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றினைப் பதிவு செய்தல், முதியோர் நாள் பராமரிப்பு நிலையங்களுக்கு நிதி உதவி அளித்தல், முதியோரின் மனநிலை மற்றும் ஆன்மீக நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக உளவியல் ஆலோசனை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் நலம் பேணுவோர்களைப் பயிற்றுவித்தல் போன்றன மிக முக்கிய அம்சங்களாகும்.

இந் நடவடிக்கைளின் ஊடாக முதியோரின் சமூக ஈடுபாட்டினை மேம்படுத்துவதும், அவர்களை மனோரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் விருத்தி செய்வதுமே எமது நோக்கமாகும். இதனால் முதியோர் தாம் வாழும் சமூகத்திலிருந்து தனிமைப்படுவதைத் தடுக்கலாம்.

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய சபையும் 2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன.


## தொலைநோக்கு

**“**இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்**”**


## பணிக்கூற்று

‘‘முதியோர்களின் நலன்களை மேம்படுத்துதல்,
உரிமைகளைப் பாதுகாத்தல், என்பனவற்றின் ஊடாக அவர்கள்
கௌரவமாகவும், கண்ணியமாகவும்,
சுதந்திரமாகவும் வாழ வழி சமைத்தல்’’

# நிறுவன கட்டமைப்பு


முதியோர்களுக்கான தேசிய சபை
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
பணிப்பாளர் (1)
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) (1)
உதவிப் பணிப்பாளர் நிர்வாகம் (1)
நீதி ஆலோசகர் (1)
கணக்காளர் (1)
நிர்வாக உத்தியோகத்தர் (1)
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 98
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 2
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
சாரதி (2)
அலுவலக உதவியாளர் (1)
அலுவலக உதவியாளர் (1)
அலுவலக உதவியாளர் (1)

# முதியோர்களுக்கான தேசிய சபை – 2011




| பெயர் | பதவி |
|---|---|
| 1. ஆர்.எம்.எஸ்.ரத்னாயக | தலைவர் |
| 2. திரு.என்.அபேரத்ன | உப தலைவர் |
| 3. திருமதி.ஜெ.கிருஸ்ணமூர்த்தி | செயலாளர் |
| 4. திருமதி.வீ.ஜெகராாசசிங்கம் | சபை உறுப்பினர் |
| 5. திரு.டர்மசிறி பீரிஸ் | சபை உறுப்பினர் |
| 6. கௌரவ.எஸ்.எஸ்.விஜேரத்ன | சபை உறுப்பினர் |
| 7. கலாநிதி.அணில் திசாநாயக்க | சபை உறுப்பினர் |
| 8. திரு.டபிள்யு.வி.கன்னங்கர | சபை உறுப்பினர் |
| 9. திரு.திலக் த சொய்சா | சபை உறுப்பினர் |
| 10. செல்வி.கீதா விமலவீர | சபை உறுப்பினர் |
| 11. திரு.பீ.பண்டாரநாயக்க | சபை உறுப்பினர் |
| 12. திரு.பீ.டபிள்யு.திலகரத்ன பண்டா | சபை உறுப்பினர் |
| 13. திரு.ஏ.அப்டோன் சில்வா | சபை உறுப்பினர் |
| 14. திரு.கே.ஏ.குணதாச பெரேரா | சபை உறுப்பினர் |
| 15. திரு.பீ.எச்.சிறிபால | சபை உறுப்பினர் |

# முதியோருக்கான தேசிய சபை தவிசாளரின் அறிக்கை – 2011

முதியோர் எமது வளமாகும். அவர்களைப் பாதுகாப்பதும், அவர்களுக்கு சக்தியூட்டுவதும், ஏனைய போதுமான வசதிகளை வழங்குவதும் ஒவ்வொருவரினதும் பாரிய கடமையும், பொறுப்புமாகும். மேற்குறிப்பிட்ட தேசிய கடமையினையும், பொறுப்பினையும் மிகவும் கருத்துள்ளதாக நிறைவேற்றுவதற்குரிய திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பும், பணியும் சமூக சேவைகள் அமைச்சின் கீழுள்ள முதியோர்களுக்கான தேசிய சபையின் மீது சார்ந்துள்ளது. முதியோருக்கான பெருமளவிலான நலன்பேணல் சேவைகளை 2011ம் வருடத்தில் பரந்தளவிலும், நெருக்கமாகவும் திட்டமிட்டவாறு நிறைவேற்ற எம்மால் முடிந்தது. இது எமக்கு பூரண திருப்பதியினையும், மகிழ்ச்சியினையும் அளிக்கின்றது.

மேற்குறிப்பிட்ட அரிய பணியினைச் சிறந்த முறையில் நிறைவேற்றிய முதியோர்களுக்கான தேசிய சபைக்கும், முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளருக்கும், அதன் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். விசேடமாக இவ் அரிய பணிகளை அவர்களால் ஆற்றல் மிக்கவாறு நிறைவேற்றியது போற்றத்தக்கதாகும்.

ஆர். எம்.எஸ்.ரத்நாயக்க
செயலாளர்
சமூக சேவைகள் அமைச்சு,
தவிசாளர்
முதியோர்களுக்கான தேசிய சபை

# முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை

# 2011 ஆண்டு – வேலை செயற்திறன் அறிக்கை

முதியோர்களுக்கான தேசிய சபை தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்திறன் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டள்ளன.

## 1. கிராம மட்ட முதியோர் அமைப்புக்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி பெற்றுக் கொடுத்தல்.

கிராம மட்ட முதியோர் அமைப்புக்கள் 385, பிரதேச மட்ட முதியோர் அமைப்புக்கள் 21 மற்றும் மாவட்ட முதியோர் அமைப்புக்கள் 01க்காக ரூபா மில்லியன் 2.133 நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், பயனடைந்தோரது எண்ணிக்கை ஆகும்.

## 2. முதியோர் அடையாள அட்டை வழங்கல்.

இவ் வருடத்துக்குள் ரூபா மில்லியன் 0.835 செலவிடப்பட்டு 35358 முதியோர்களுக்கு முதியோர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

## 3. முதியோர் பகல் நேர ஓய்வு நிலையங்களுக்கு நிதியுதவி வழங்கல்.

31 முதியோர் பகல் நேர பராமரிப்பு நிலையங்களுக்கு ரூபா மில்லியன் 0.759 வழங்கப்பட்டுள்ளது.

## 4.பயிற்சி நெறி மற்றும் விளக்கமளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

தேசிய மட்டத்திலான முதியோர் ஆலோசனை திறனை அபிவிருத்தி செய்வதற்கான இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 18 உம் பிரதேச மட்ட முதியோர்களுக்கான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் 135 உம் நடாத்தப்பட்டுள்ளதுடன் அதற்காக 1,976,382 செலவிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் பிரிவு 157 இனை இணைத்து அறநெறிப் பாடசாலை மாணவர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் 785 நடாத்தப்பட்டது. அதற்காக 0.785 மில்லியன் செலவாகியுள்ளது.

ஓய்வு பெற முன்னரான தெளிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் 03 நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக செலவிடப்பட்ட தொகை 0.237 ஆகும்

## 5.முதியோர்களுக்கான கண்வில்லை/ செவிப்புல உபகரணங்கள் வழங்கல், மருத்துவ சிகிச்சைகள்

2011 ஆம் ஆண்டிற்குள் 1455 முதியோர்களுக்கு வைத்தியரின் சிபார்சுக்கமைய கண்வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் 51 பேருக்கு செவிப்புலக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்காக ரூபா மில்லியன் 11.04 செலவிடப்பட்டுள்ளது.

## 6. சர்வதேச முதியோர் தின விழா

''முதியோர் உலகை ஒளிரச் செய்வோம்'' என்ற கருப்பொருளில் 2011 ஆம் ஆண்டுக்கான சர்வதேச முதியோர் தின விழா 2011.10.01 ஆம் திகதி கௌரவ அமைச்சர் அவர்களின் தலைமையிலும் மற்றும் முதியோர்களின் பங்குபற்றுதலுடனும் நடாத்தப்பட்டது. இதற்காக ரூபா மில்லியன் 1.347 செலவிடப்பட்டுள்ளது.

## 7. முதியோர் இல்லத்திற்கு நிதியுதவி வழங்குதல்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் நிர்வாக சபையினால் பராமரிக்கப்படுகின்ற கதிர்காமம் முதியோர் இல்லம் மற்றும் ஓய்வு விடுதியினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா மில்லியன் 1.703 செலவிடப்பட்டுள்ளதுடன், 35 முதியோர்களுக்கு வதிவிடப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 8. முதியோர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம் (வடிஹிட்டி ஆவரண)

அன்பளிப்பாளர்களின் நிர்ணயத்திற்கமைய 2011 ஆம் ஆண்டில் ஒருவருக்கு மாதத்திற்கு ரூபா 250/= என்ற வீதத்தில் 63 முதியோர்களுக்கு பாதுகாப்பு நிதி வழங்கக் கூடியதாக அமைந்திருந்தது.

## 9. வெளியீடுகள்

இவ் வருடத்திற்குள் கீழ்வரும் நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

- ''முதியோர்களுக்கான கைந்நூல்'' 750 பிரதிகள்
- ''முதியோர்கள்'' முதியோர் தின வெளியீடு 10,000 பிரதிகள்
- ''வியசரிய''மூன்று மொழிகளிலான செய்தித்தாள் மேலதின வெளியீடு 2,500

இவற்றுக்காக ரூபா மில்லியன் 0.502 செலவிடப்பட்டது

## 10. முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2011 ஆம் ஆண்டில் 50 தடவைகள் சபை கூட்டப்பட்டுள்ளதுடன், முதியோர்களிடமிருந்து 212 முறையீடுகள் கிடைக்கப்பெற்று அவற்றில் 53 பூரணமாக தீர்வு காணப்பட்டுள்ளன. அதற்காக 2011 ஆம் ஆண்டில் சபையின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காகரூபா மில்லியன் 0.723 செலவிடப்பட்டுள்ளது.

## 11. முதியோர்களுக்கான தேசிய சபை

2011 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய சபையினால் 12 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்காக ரூபா மில்லியன் 0.501 செலவிடப்பட்டுள்ளது.

2011 ஆண்டில் ரூ.81.256 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் கிடைக்கப்பெற்ற தொகை 75.09 ஆகையால் 2011 உரிய இலக்கினை அடைய முடியாது போயிற்று.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி 62.19 மில்லியனில் முதியோர் நலனுக்காக 22.61 மில்லியன் செலவிடப்பட்டது.

**ஜெ. கிருஷ்ணமூர்த்தி**
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

# 2011 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திறன்
## முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலுக்காக நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | இல்லத்தின் பெயர் | புனரமைப்பு | விடுவிக்கப்பட்ட நிதியின் அளவு(ரூ) |
|---|---|---|---|
| மேல் | செத்செவன அரச முதியோர் இல்லம், மீரிகம | கூரை புதுப்பித்தல் | 631,505.00 |
| | மதுபிடிய யசிபுரா சிரேஸ்ட பிரஜைகள் அமைப்பு, பானதுரை | வரவேற்பறையினை புதுப்பித்தல் | 100,000.00 |
| | முதியோர் நலன்புரி சங்கம் கோரலஇம | அறையினை அமைத்தல் | 80,000.00 |
| | ஜனாதார முதியோர் சங்கம், மொறட்டுவ. | மருத்துவ அறையினை அமைத்தல். | 300,000.00 |
| சப்பிரகமுவ | மவ்பிய செவன முதியோர் இல்லம்,மீபாகம,கலவான | மருத்துவ வாட்டின் கூரையினை அமைத்தல். | 805,220.00 |
| | அனோம்தச்சி முதியோர் இல்லம், மாவனல்ல | சரிவான பாதை அமைத்தல். | 623,581.00 |
| | நெலும்தெனிய முதியோர் இல்லம், வறகாபொல | சுற்றுமதில் அமைத்தல் | 456,986.74 |
| வட மத்திய | பரகும் முதியோர் இல்லம், பொலன்னறுவை | குளியலறை மற்றும் மலசலகூடத்தினை மேம்படுத்தல் | 303,099.82 |
| | சாந்தி செவன முதியோர் இல்லம், அநுராதபுரம் | அறை 3 இனை புதுப்பித்தல் | 905,995.44 |
| தென் | ரத்நாயக முதிரோயர் இல்லம் , இகல பெலிகல்ல | மருத்துவ அறை மற்றும் மரண அறையினை அமைத்தல் . | 500,000.00 |
| | கருனாரத்ன முதிரோயர் இல்லம், கிரிந்த புகுல்வல்ல | பெண்கள் தங்குமிடத்தினை புதுப்பித்தல். | 500,000.00 |
| மத்திய | போபிடிய முதியோர் இல்லம், போபிடிய | புதிய தங்குமிடத்தினை அதைத்தல். | 600,000.00 |
| | மஙயியாவ முதிரோயர் இல்லம், கங்கவட கோரலை | மதிலின் மிகுதிப் பகுதியினை அமைத்தல். | 409,214.20 |
| ஊவா | கதிர்காமம் முதியோர் இல்லம் | சமையலறை மற்றும் மலசலகூடத்தினை புதுப்பித்தல்<br>சாப்பாட்டறையினை புதுப்பித்தல். | 500,545.23<br>200,000.00 |
| | பிலிசரண முதியோர் இல்லம், மொனராகரை | பாதுகாப்பு மதிலினை அமைத்தல் | 300,000.00 |
| | சிறி சம்போதி முதியோர் இல்லம் மொனராகரை | கூரையினைப் புதுப்பித்தல் | 468,611.84 |
| | ரிதிபான முதியோர் இல்லம், பதுளை | மலசலகூடத்தினை புதுப்பித்தில் | 291,000.00 |
| வடக்கு | பரமானந்தா முதியோர் இல்லம், யாழ்ப்பாணம் | சிகிச்சை அறையினை அமைத்தல் | 692,452.00 |
| | சாந்தோம் முதியோர் இல்லம், மன்னார் | ஓய்வு அறையினை அமைத்தல். | 547,687.00 |
| கிழக்கு | சென் யோசப் முதிரோயர் இல்லம், மட்டக்களப்பு | மதில் மற்றும் மரசலகூடத்தினை அமைத்தல் | 500,000.00 |
| | நந்தாவனம் முதிரோயர் இல்லம், மட்டக்களப்பு | சாப்பாட்டறையினை அமைத்தல். | 760,000.00 |
| வட மேல் | நந்தா ஜயசிங்க முதிரோயர் இல்லம் | பரிமாறும் அறையினை அமைத்தல் | 400,000.00 |
| | நில் ஹேமந்த அனுச்மரண முதியோர் இல்லம், உடுபத்தாவ | மலசல கூடத்தினை அமைத்தல். கட்டிடத்தினை புதுப்பித்தல் | 379,519.11 |
| | கபலாவ பியபாரனி அனுநாகிமி அனுஸ்மரண முதிரோயர் இல்லம் | மலசல கூடத்தினை அமைத்தல். கட்டிடத்தினை புதுப்பித்தல் | 400,000.00 |
| மொத்தம் | | | 12,206,374.28 |

# நடமாடும் சேவைகள் மூலம் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விபரம்

| மாகாணம் | மாவட்டம் | வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எ/கை | நடமாடும் சேவைகளின் எ/கை |
|---|---|---|---|
| மேல் | கொழும்பு | 1552 | 13 |
| | களுத்துறை | 867 | 14 |
| | கம்பஹா | 3100 | 14 |
| மத்திய | கண்டி | 1501 | 07 |
| | மாத்தளை | - | 04 |
| | நுவரெலியா | 1400 | 05 |
| தென் | காலி | 1154 | 10 |
| | மாத்தறை | 1092 | 03 |
| | ஹம்பாந்தோட்டை | 347 | 02 |
| வடக்கு | கிளிநொச்சி | 6144 | 01 |
| கிழக்கு | அம்பாறை | 839 | 06 |
| வட மேல் | குருநாகல் | 7678 | 24 |
| | புத்தளம் | 1585 | 05 |
| வட மத்திய | பொலன்னறுவை | 1977 | 08 |
| | அநுராதபுரம் | 2295 | 09 |
| ஊவா | பதுளை | 1479 | 10 |
| | மொனராகலை | 767 | 03 |
| சப்பிரகமுவ | கேகாலை | 1019 | 07 |
| | இரத்தினபுரி | 1726 | 07 |
| **மொத்தம்** | | **35358** | **136** |

# கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல் ரூ.5,000

| மாகாணம் | மாவட்டம் | ரூ.5,000 நிதியுதவி வழங்கப்பட்ட சங்கங்கள் |
|---|---|---|
| மேல் | களுத்துறை | 14 |
| | கொழும்பு | 18 |
| | கம்பஹா | 79 |
| மத்திய | கண்டி | 39 |
| | நுவரெலியா | 30 |
| | மாத்தளை | 07 |
| தென் | காலி | 37 |
| | மாத்தறை | 29 |
| | ஹம்பாந்தோட்டை | 04 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 07 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 35 |
| | அம்பாறை | 23 |
| | திருகோணமலை | 03 |
| வட மேல் | புத்தளம் | 05 |
| | குருநாகல் | 12 |
| வட மத்திய | பொலன்னறுவை | 01 |
| | அநுராதபுரம் | 15 |
| சப்பிரகமுவ | இரத்தினபுரி | 19 |
| | கேகாலை | 08 |
| **மொத்தம்** | | **385** |

## பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/= நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|---|
| மேல் | கொழும்பு | 02 |
| | களுத்துறை | 01 |
| தெற்கு | காலி | 03 |
| | மாத்தறை | 03 |
| | ஹம்பாந்தோட்டை | 02 |
| சப்பிரகமுவ | கேகாலை | 02 |
| வட மேல் | புத்தளம் | 02 |
| ஊவா | பதுளை | 03 |
| வட மத்திய | பொலன்னறுவை | 01 |
| மத்திய | மாத்தளை | 02 |
| மொத்தம் | | 21 |

## மாவட்ட மட்ட முதியோர் அமைப்புக்களுக்கு ரூபா 15,000 நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | மாவட்டம் |
|---|---|
| மேல் | கொழும்பு |

# நிதி உதவி வழங்கப்பட்ட பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள்

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | நிதி உதவி மற்றும் உபகரணங்கள் | |
|---|---|---|---|---|
| | | | நிலையங்களின் எ/கை | தொகை |
| மேல்ஏ | கம்பஹா | மீகமுவ | 01 | 24,950 |
| | | தொம்பே | 01 | 25,000 |
| | கொழும்பு | சீதாவக | 01 | 25,000 |
| | | சிறி ஜயவர்த்தனபுர கோட்டை | 01 | 25,000 |
| மத்திய | கண்டி | வலபன | 01 | 25,000 |
| | நுவரெலியா | பகதஹேவாகட | 01 | 25,000 |
| | | அம்பகமுவகோரலை | 03 | 75,000 |
| வட மேல் | குருனாகலை | குளியாபிடிய கிழக்கு | 01 | 25,000 |
| சப்பிரகமுவ | | குளியாபிடிய மேற்கு | 02 | 50,000 |
| | இரத்தினபுரி | அகலியகொட | 01 | 25,000 |
| ஊவா | மொனராகலை | செவனகல | 02 | 50,000 |
| | | மடுல்ல | 02 | 50,000 |
| | பதுளை | சொரணதொட | 01 | 25,000 |
| கிழக்கு | திருகோணமலை | கந்தளாய் | 05 | 125,000 |
| | மட்டக்களப்பு | மண்முனை தெற்கு | 01 | 25,000 |
| | | மண்முனை வடக்கு | 01 | 25,000 |
| | அம்பாறை | கல்முனை – தமிழ் | 01 | 25,000 |
| | | கல்முனை | 01 | 25,000 |
| வட மத்திய | அனுராதபுரம் | மிஹிந்தலை | 01 | 25,000 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | வலிகாமம் தென் மேற்கு | 03 | 75,000 |
| **மொத்தம்** | | | **31** | **774,950** |

## ஓய்வு பெற இருப்பவர்களுக்கான நிகழ்ச்சி

| இடம் | நிகழ்ச்சிகளின் எ/கை | பயன் அடைந்தோர் எ/கை | தொகை |
|---|---|---|---|
| கொப்பேகடுவ விவசாய பயிற்சி நிலையம் | 01 | 200 | 163,300.00 |
| கிராமின் நிவாகன, நாவல | 01 | 160 | 148,375.00 |
| கிராமின் நிவாகன, நாவல | 01 | 150 | 137,250.00 |
| **மொத்தம்** | | | |

## உளவியல் ஆலோசனை பயிற்சி நிகழ்ச்சி தொடர்பான தகவல்கள்

| பிரதேச செயலாளர் பிரிவு | பயன் அடைந்தோர் எ/கை | தொகை |
|---|---|---|
| மதுகம | 50 | 28,925.00 |
| மஹரகம | 52 | 30,125.00 |
| பாதுக்க | 50 | 29,025.00 |
| கஹடகஸ்தெகிலிய | 51 | 39.080.00 |
| இஹ்கிரிய | 50 | 29.475.00 |
| நவடீதகம | 53 | 36.145.00 |
| அம்பலாங்கொடை | 50 | 31.277.00 |
| புளத்சிங்கள | 50 | 28.840.00 |
| பென்தொட | 50 | 32.250.00 |
| தொம்பே | 50 | 33.010.00 |
| மொறடுவ | 50 | 29,034.00 |
| பலாங்கொடை | 50 | 32.540.00 |
| எம்பிலிபிட்டிய | 50 | 33.895.00 |
| ஹபுதல | 50 | 34,500.00 |
| மஹவிலாச்’சிய | 51 | 38.398.00 |
| ஹபிடிகொல்லாவ | 50 | 40.175.00 |
| நுவரெலியா | 50 | 60.450.00 |
| மிஹிந்தலை | 51 | 39,238.00 |
| **மொத்தம்** | **908** | **626,382.00** |

# முதியோருக்கான குடும்ப உறைவிட நலனோம்பல் சேவை – பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

முதியோருக்குத் தேவையான பாதுகாப்பு, தாதியர் சேவை போன்றனவற்றினை வழங்குவதற்காக முதியோர் பாதுகாப்பிற்கான தொண்டர் ஊழியர்களை பயிற்றுவித்து, தொழிலாற்றும் முகமாக முதியோர்களுக்கான தேசிய செயலகம் ஒரு பயிற்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. அதற்கேற்ப தெரிவு செய்யப்பட்ட 150 நபர்களடங்கிய குழாமொன்றிக்கு முதியோர்களைப் பராமரித்து, அவர்களின் நலனோம்பல் சேவைகளை வழங்குவதற்கான மூன்று வாரகால முறைமையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது, விசேடமாக மேற்கு மாகாணத்தில் வாழும், இச் சேவை தேவைப்படும் முதியோருக்கு இவ் அரிய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அவர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றவர்களின் சேவைகளை ரூபா. 600/= னைக் கட்டணமாகச் செலுத்தி பகற்காலங்களில் எட்டு மணித்தியால மாற்று முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

இச் சேவைகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் முழுக் கண்காணிப்பின் கீழ் வழங்கப்படுகின்றன. இச் சேவைகளைப் பெறுவோரின் தேவைகளின் தன்மையினைப் பொறுத்து, பெண் அல்லது ஆண் சேவை வழங்குவோர்களின் சேவையினைப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் இவ்வாறான முதியோரின் நலனோம்பல் சேவையினை வழங்கும் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் ஒரு விழுமிய நியதிக் கோவையின் படி தொழிலாற்றுவார்கள்.

இப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை, சமூக சேவைகள் அமைச்சும், சுகாதார அமைச்சும் ஒருங்கிணைந்து திட்டமிட்டு நடத்துகின்றது. இப் பயிற்சினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வோருக்கு தகுந்த சான்றிதழும், அடையாள அட்டையொன்றும் வழங்கப்படுகின்றன. ஆகவே மிக நம்பிக்கையான முதியோர் பாதுகாப்புத் தொண்டர் ஊழியர்களின் சேவைகளை பெறுவது இதனால் சாத்தியமாகின்றது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் விளைவாக, முதியோரும், அவர்களின் குடும்பமும் மட்டுமல்லாது, இப் பயிற்சியினைப் பெற்றுக் கொண்டோருங் கூட பயனடைவார்கள். முதியோர் பாதுகாப்புத் தொண்டர் ஊழியர்கள் அரச அங்கீகாரம் பெற்ற ஒரு பெறுமதி மிக்க சான்றிதலை இப் பயிற்சியின் பின்னர் பெற்றுக் கொள்வதினால், அவர்கள் முதியோர் பாதுகாப்பாளர்களாகச் சுதந்திரமாகத் தொழிலாற்றி ஒரு வருமானத்தை ஈட்ட முடியும்.

இம் முதியோர் பாதுகாப்புத் தொண்டர் சேவை தற்பொழுது மேற்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு செயற்படுகின்ற போதிலும், அதனை ஏனைய மாகாணங்களுக்கும் எதிர்காலத்தில் பரந்தளவில் விரிவாக்கி அவ்வாறான தேவையுள்ள முதியோருக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோர் குடும்ப உறைவிட நலனோம்பல் ஊழியர்களின் 2011ம் வருடத்திற்கான பயிற்சி பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| குழாம் | பயனடைந்தோரின் எண்ணிக்கை | தொகை (ரூபா) |
|---|---|---|
| 5 வது குழாம் | 30 | 0.344 |

# முதியோர் பாதுகாப்புத் திட்டம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் தீர்மானத்திற்கமைய உதவியற்ற வறுமை நிலையில் வாழும் முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த நிகழ்ச்சித் திட்டமானது முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக எந்தவொரு நபருக்கும் அன்பளிப்பு வழங்க முடியும் என்பதுடன், அன்பளிப்பாளர்கள் மூலம் வழங்கப்படுகின்ற தொகை பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட உதவி அற்ற மிகவும் வறுமையான முதியோர்களுக்காக மாதத்திற்கு ரூபா 250 என்ற வீதத்தில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பயனாளிகளுக்காக பணம் வழங்கும் வேளையில் 04 மாதத்திற்கு ஒரு முறை பயனாளி ஒருவருக்காக ரூபா 1,000/= என்ற வீதத்தில் பிரதேச செயலகத்திற்கு பணம் வழங்கப்படுவதுடன், பிரதேச செயலகத்தினால் பயனாளிக்கான பணம் வழங்கப்படுகின்றது.

பிரதேச செயலகத்தில் உள்ள எமது அதிகாரிகள் (முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்/சமூக சேவைகள் உத்தியோகத்தர்) மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்த பயனாளி தொடர்பான தகவல்களை சேகரிப்பதுடன், பயனாளிக்கான பணத்தொகை வழங்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அன்பளிப்பாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

அன்பளிப்பாளர்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிப் பணத்தொகையினை வழங்கும் வேளையில் ஒருவர் அல்லது குறிப்பிட்ட சிலரைத் தெரிவு செய்ய முடியும். அவ்வாறு இல்லையாயின் அந்தத் தெரிவு எமது அலுவலகத்தின் மூலம் நடைபெறுவதுடன், பயனாளியின் பெயர், முகவரி உள்ளடங்கலான தகவல்களை அன்பளிப்பாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்திற்காக அன்பளிப்பு வழங்குவதற்கு விரும்பும் ஒருவராயின், நுகேகொடை இலங்கை வங்கியின் 5234881 என்ற முதியோார் பாதுகாப்பு திட்டத்தின் கணக்கில் தங்களது அன்பளிப்புத் தொகையினை வழங்குவதுடன், அந்தத் தொகை வைப்பிலிடப்பட்டதும் அதன் வைப்புப் பற்றுசீட்டினை எமக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது எமது அலுவலகத்திற்கு வருகை தந்து தங்களது பணத்தொகையினை வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டமானது உதவியற்ற முதியோர்களுக்காக நடாத்தப்படுவதுடன் இது மிகவும் புண்ணியம் அளிக்கும் திட்டம் என்பதனால் மென்மேலும் இதனை விளம்பரப்படுத்துவதன் மூலம் அதிகளவிலான முதியோர்களுக்கு உதவியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம், 2011 ஆண்டில் முதியோர் பாதுகாப்புத் திட்டத்தின் அன்பளிப்பாளர்கள், பயனாளிகள் மற்றும் உரிய பிரதேச செயலாளர் பிரிவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

# முதியோர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்

| இல | அன்பளிப்பாளரின் பெயர் | பயனாளிகளின் தொகை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|---|
| 1 | செல்வி..டபிள்யு. யமுனா சித்ராங்கனி | 11 | திருமதி.அகிலிஸ் பெர்னாந்து | இப்பாகமுவ |
| | | | திருமதி.ஆர்.வை.ஜீ.குணவதி | கலஹெதர |
| | | | திருமதி.எம்.ஜயவதி | புளத்சிங்கள |
| | | | திருமதி.ஏ.சீ.கமலாவதி | புளத்சிங்கள |
| | | | திருமதி.டபிள்யு.பீ.லீலாவதி | திஸ்ஸமஹாராம |
| | | | திருமதி.டீ.பீ.ஜேன்நோனா | ரிதிகம |
| | | | திரு.வினி பெர்னாந்து | பாணந்துறை |
| | | | திரு.ஏ.ஜீ.தர்மவர்தன | தரணியகல |
| | | | திருமதி.ஏ.டபிள்யு.மகிலின் ருத்ரிகு | மாஸ்பொத |
| | | | திருமதி.ஜீ.தெரேசா டிலெக்ஸ் | களணி |
| | | | திருமதி.எம்.ஜீ.டிங்கிரியம்மா | குண்டசாலை-மாணிக்கின்த |
| 2 | திரு.பீ.ஏ.பெரேரா | 1 | திரு.எம்.ஏ.செதான் சிஞ்ஞோ | நிட்டம்புவ |
| 3 | திரு.ஜே.ஏ.லெனாட் றோகண | 1 | திருமதி.ஜீ.ஏ.எமலின் நோனா | பியகம |
| 4 | திரு. எஸ்.ஏ.விஜயரத்ன | 2 | திரு.ஜீ.வீ.டான்சில் | வத்தளை |
| | | | திருமதி.மரியா பெர்னாந்து | வத்தளை |
| 5 | திருமதி.சோமாகுலதுங்க | 3 | திரு.ஏ.அக்னோனி | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை |
| | | | திருமதி.ஈ.வயலட்நோனா | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை |
| | | | திருமதி.கே.ஏ.பொடிகாமினே | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை |
| 6 | திரு.ஜயந்த பின்சிஹேவா | 1 | திருமதி.கே.மேரிநோனா | கெஸ்பாவ |
| 7 | திருமதி. லலனி பெரோரா | 2 | திருமதி.டபிள்யு.தினுகாமி | பொல்பிதிகம |
| | | | திரு.ஜி.ஏ.பியசேன | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை |
| 8 | திருமதி.எஸ்.பிரசிங்கிகா சில்வா | 1 | திரு. எம்.எம்.அபேரத்ன | தமுத்தேகம |

| இல | அன்பளிப்பாளரின் பெயர் | பயனாளிகளின் தொகை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|---|
| 9 | திருமதி.எம்.எஸ்.ஏ.ஹின்டிட் | 8 | திருமதி.ஜீ.ஆர்.சாதிநோனா | வறகாபொல |
| | | | திருமதி.ஐ.ஜீ.சோய்தா | வறகாபொல |
| | | | திருமதி.எச்.பீ.பொடினோனா | வறகாபொல |
| | | | திருமதி.டபிள்யு.எச்.லிலியா | வறகாபொல |
| | | | திருமதி.ஜே.பீ.லாயிசா | வறகாபொல |
| | | | திரு.ஏ.சிமியோன் | மீகமுவ |
| | | | திருமதி.அமரசிறி டீ சில்வா | மீகமுவ |
| | | | திரு.ஜே.எம்.எட்மன் | மீகமுவ |
| 10 | திருமதி.சுனிலா பெரோரா | 1 | திருமதி.தோனா அக்னஸ் | களணி |
| 11 | திருமதி.தரங்கா கருனாசேன | 1 | திருமதி.ஐ.அன்சினோனா | களணி |
| 12 | திருமதி.டபிள்யு.எம்.வக்சலா | 1 | திரு.ஜி.அஸ்பனியேஹெதர | வத்தேகம |
| 13 | திருமதி.என்.ஏ.பெர்னாந்து | 6 | திரு.எம்.பீடர் பெரேரா | மீகமுவ |
| | | | திருமதி.ஆர்.ஏ.குசுமாவதி | மீகமுவ |
| | | | திரு.ஏ.ஹேமபால பெரோரா | மீகமுவ |
| | | | திரு.டபிள்யு.டீ.தர்மதாஸ | மீகமுவ |
| | | | திரு.ஏ.விக்டர் | மீகமுவ |
| | | | திருமதி.கே.பீ.அசிலின் னோனா | மீகமுவ |
| 14 | திரு.டீ.தமிதேகம | 4 | திருமதி.எம்.டீ.லீலாவதி | மஹகும்கடவல |
| | | | திருமதி.ஆர்.டீ.பீனி | ஹிரிபாவ |
| | | | திருமதி. எச்.எம்.ஹாமினோனா | ஹிரிபாவ |
| | | | திருமதி.ஆர்.எம்.ஞானலதா | பொல்காவெல |
| 15 | திருமதி.ஆர்.எம்.குசுமா குமாரிகாமி | 1 | திருமதி.ஏ.சுமனாவதி | மிஹிந்தலை |
| 16 | திருமதி.ஏ.எம்.ஆர்.ஏ.ஜயசுந்தர | 1 | திருமதி.ஆர்.அகினோனா | கடுவெல |
| 17 | திருமதி.நந்தா கருனாசேன | 1 | திருமதி.உல்.ஏ.ஹின்காமி | களணி |
| 18 | திருமதி.எம்.ஜீ.குணதாஸ மற்றும் செல்வி.எம்.டீ.ஜ.யு.குணதாஸ | 2 | திருமதி.ஏ.சோமா குணவர்த்தன | மினுவாங்கொடை |
| | | | திரு.எம்.ஜி.விபுலசேன | மினுவாங்கொடை |

| இல | அன்பளிப்பாளரின் பெயர் | பயனாளிகளின் தொகை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|---|---|
| 19 | திரு.ஆனந்த திலகசிறி | 10 | திருமதி.எம்.ஏ.ஞானவதி | செவனகல |
| | | | திருமதி.ஆர்.எம்.டிங்கிகா | செவனகல |
| | | | திருமதி.எம்.ஜு.அனகி | மினுவாங்கொடை |
| | | | திருமதி.யு.ஜீ.டிங்கிரிமனிகே | உடுகம்பொல |
| | | | திருமதி. ஏ.டபிள்யு.ஜீ.பேபினோனா | தெவிநுவர |
| | | | திரு.எம்.வீ.பியசேன | தெவிநுவர |
| | | | திருமதி.ஏ.டபிள்யு.ஜீ.குசுமாவதி | தெவிநுவர |
| | | | திரு.தம்பிமுத்து இளையதம்பி | சம்மாந்துரை |
| | | | திரு. அபுரன் முடியப்பு | நெடுந்தீவு |
| | | | திருமதி.எம்.ஜீ.லீலி | களணி |
| 20 | திரு.கே.ஜீ.நிசாந்த | 1 | திருமதி.எம்.ஜீ.அசிலின் னோனா | தொம்பே |
| 21 | திரு.எம்.எஸ்.எம்.அஸ்ரோப் | 1 | திரு. அப்துல் ரஸ்வான் | களுத்துறை |
| 22 | திரு. டீ.டீ.நேசகுமார் | 1 | திரு.சிங்கலிங்கம் சிங்கவேல் | கண்டாவளை |
| 23 | திருமதி.சீலா பியசிங்க | 1 | திருமதி.எச்.எம்.ஹேலத்மனிகே | அம்பாகமுவ |
| 24 | திருமதி.இந்ராணி சௌவிரத்ன | 1 | திருமதி.யசவதி வென்னசிங்க | மஹரகம |

# சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் தீர்மானத்தின் கீழ் 2007 ம் ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தினை முன்னிட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்பு சபை போன்றன இணைந்து இந்த ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்ததுடன், 2008 ஜனவரி 01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

அது தொடர்பில், பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டு 70 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளால் பராமரிக்கப்படாத, அரச ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், சுயதொழில் கொடுப்பனவுகள் மற்றும் சமூக காப்புறுதி முறைகளின் மூலம் பயன்பெறாத மிகவும் வறிய முதியோர்கள் இது தொடர்பில் தெரிவு செய்யப்படுவதுடன், நோய் வாய்ப்பட்டவர்கள் மற்றும் ஊனமுற்றோர்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு தேவையான நிதியுதவி ரூபா மில்லியன் 03 (ரூபா.3,000,000) சுப்பிரி வாசனா நிதியுதவியில் வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை சமூக பாதுகாப்பு சபை மூலம் மாதாந்தம் ஓய்வூதியத் திட்ட முறையாக வழங்கப்படுகின்றது.

இத் திட்ட முறைக்கு ஏற்ற சிரேஸ்ட பிரஜைக்காக ரூபா 500/-என்ற வீதத்தில் 89 பேருக்கு உதவியளிக்கப்படுகின்றது.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட மூலத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிச் சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட தவிசாளர் உட்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

இச் சபையின் செயற்பாடானது தமது பிள்ளைகளினால் கைவிடப்பட்ட, 60 வயதிற்கு மேற்பட்ட பெற்றோர்களுக்கு பராமரிப்பு நிதியை பெற்றுக் கொடுத்தலாகும். ஆகவே, பிள்ளைகளினால் கைவிடப்பட்ட பெற்றோர்கள் சபைக்கு விண்ணப்பிக்குமிடத்து, சபையானது முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழ், இருதரப்பினரையும் அழைத்து விசாரணை செய்து, பெற்றோருக்கு ஒரு குறிப்பிட்ட மாதாந்தப் படியை கொடுப்பனவாக செலுத்துவதற்கு தீர்மானிக்கும். இவ்வாறு தீர்மானிக்கும் பொழுது பிள்ளைகளின் வருமானம், மற்றும் பெற்றோர்களின் வருமானம், அவர்களின் ஏனைய விபரங்கள் யாவும் கவனத்தில் கொள்ளப்படும்.

இங்கு பெற்றோர்கள், பராமரிப்பு நிதிக்கு விண்ணப்பிக்கும் போது, தம்மால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளிடமிருந்தும் (**Adopted Child**) பராமரிப்பு நிதியைப் பெற்றுக் கொள்ள இடமுண்டு.

மேலும் 60 வயதிற்கு கீழ்ப்பட்ட பெற்றோர்கள் தமது சொந்த பராமரிப்பிற்காக போதுமான அளவு வருமானத்தினைத் தேடிக் கொள்ள முடியாத வகையில் ஏதேனும் உடல், உள ரீதியான தாக்கங்களுக்கு உட்பட்டவரெனில் அவர்களும் விண்ணப்பத்தினை சட்டத்தின் 25(**iv**) பிரிவின் கீழ் சபைக்கு சமர்பிக்க முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபைக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்குத் தேவையான விண்ணபப்படிவங்களை கிராம உத்தியோகத்தர்/ பிரதேச செயலாளர் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும், இந்தச் சபைக்கு, குடும்ப பிணக்குகளையோ அல்லது சொத்து சம்பந்தமான பிரச்சனைகளையோ தீர்க்க இச் சட்டத்தின் கீழ் அதிகாரம் இல்லை.

இச் சபையினால் வழங்கப்பட்ட ஏதாவது கொடுப்பனவு உத்தரவினை எந்தவொரு பிள்ளையும் நிராகரிக்கும் சந்தப்பத்தில், சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு சுதந்திரமானதாக செயற்படுவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க முடியும். அங்கு நீதவானுக்கு அக் கட்டளையை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட சட்டத்தில் செயற்படுத்தப்படுவது போல செயற்படுத்துவதற்கு அதிகாரம் உண்டு.

# முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை

| | | |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | - | 212 |
| போதுமான தகவல்கள் அற்றவை | - | 16 |
| காணி மற்றும் குடும்பப் பிணக்குகள் உள்ளடங்கிய வழக்குகள் | - | 49 |
| தீர்மானத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | - | 147 |

| | | | |
|---|---|---|---|
| தீர்வு எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | - | 53 | 147 |
| அனுமதிக்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை | - | 27 | |
| மீளப் பெறப்பட்ட வழக்குகள் | - | 19 | |
| முடிவு காணப்படாமல் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை | - | 48 | |

## முதியோர்களுக்கான பராமரிப்பு சபையின் அங்கத்தவர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. டட்லி கருனாரத்ன |
| செயலாளர் | - | திரு.எஸ்.அமரகோன் |

### சபையின் அங்கத்தவர்கள்

1. பேராசிரியர்.திருமதி.வை.இராசநாயகம்
2. திரு.டி.பேரின்பநாயகம்
3. திரு.ஏ.சீ.எம்.எம்.பாலில்
4. திரு.எச்.எஸ்.எல்.ராஜபக்ஸ

# முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை

## பொதுவான கணக்குக் கொள்கை

அ) இந்த நிறுவனமானது நிதிக் கூற்றினை தயாரிப்பது தொடர்பில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமனம் போன்றவற்றினைப் பின்பற்றுகின்றது.

## ஆ) அரச கொடைகள்

முதியோர்களுக்கான தேசிய செயலகம் வருமானம் கிடைக்கப் பெறுகின்ற நிறுவனமல்ல. இது திறைசேரியில் இருந்தே நிதியினைப் பெற்று இயங்கி வருகின்றது.

திறைசேரியின் மூலம் கிடைக்கப் பெறும் பணத்தில் மீண்டுவரும் செலவீனங்களாக எடுத்துக் கொள்ளப்படும் பணம் வருமானம் மற்றும் செலவீனக் கணக்கிலும், மூலதனச் செலவானது அரச மூலதனக் கொடையில் பிரதிபலிக்கப்படுகின்றது.

## நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு

**அ)**பெறுமானத் தேய்வுக் கொள்கை

I. நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வுக் கொள்கையானது கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு அகற்றப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை.

II. கீழ்வரும் நிலையான சொத்துக்களுக்கு நேர் கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படும்.

| | | |
|---|---|---|
| வாகனம் | - | 10% |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | - | 15% |
| இயந்திரங்கள் | - | 20% |

III. முதியோர் இல்லங்களை திருத்தம் செய்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பான செலவுகள் ரூபா 11,414,732.70 முதியோர்களுக்கான தேசிய சபைக்கு உரித்தானது ஒன்றல்லாததால் மூலதனச் செலவாகக் காட்டப்பட மாட்டாது.

ஆ) மூலதனச் செலவீனம் மற்றும் மீண்டிடமும் செலவினம் நிதி பெற்றுக் கொள்வது தொடர்பான அறிக்கைகள் உள்ளக்கப்பட்டுள்ளன.

இ) சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக ரூபா 1,626,420 சம்பளமாக வழங்கப்படுகின்ற 7 பேர் இச் செயலகத்தில் பணிபுரிகின்றனர்.

ஈ) நிலையான சொத்துக்கள்,தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் பிரதேச செயலக மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன.

பின்னிணைப்பு – 1ஏ

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்
## 2011 மார்கழி 31ம் திகதிய நிதி நிலைக் கூற்று

| 2010 ரூபா | விபரணம் | குறிப்பு | கிரயம் 2011 (ரூபா) | பெறுமானத்தேய்வு ஏற்பாடு 2011 (ரூபா) | தேறிய கிரப் பெறுமதி 2011 (ரூபா) |
|---|---|---|---|---|---|
| | **நிலையான சொத்து** | | | | |
| 3,450,157.21 | உபகரணங்கள் | | 7,615,372.47 | 4,719,212.95 | 2,896,159.52 |
| 2,385,000.00 | வாகனங்கள் | | 7,450,000.00 | 750,000.00 | 6,700,000.00 |
| 442,309.60 | இயந்திர சாதனமும் இயந்திரமும் | | 2,301,809.00 | 1,647,901.80 | 653,907.20 |
| 6,277,466.81 | | | **17,367,181.47** | **7,117,114.75** | 10,250,066.72 |
| 4,393,135.10 | நிலையான வைப்பு | | | | 4,810,482.93 |
| | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| 227,009.34 | பொதுப் பதிவேடுகள்/சரக்கிருப்புக்கள் | | | 486,682.50 | |
| 204.00 | செலுத்தப்படாத முற்பணம் | 10 | | 1,000.00 | |
| 45,800.00 | செலுத்தப்படாத உற்சவ முற்பணம் | | | 50,800.00 | |
| - | செலுத்தப்படாத அனர்த்த முற்பணம் | | | 130,389.96 | |
| 3,196,745.00 | உத்தியோகத்தர் கடன் நிதி | | | 3,368,579.00 | |
| 1,552.240.63 | பணமும் பண சம மதிப்பும | 8 | | 743,515.76 | 4,780,967.22 |
| **12,379,768.98** | **மொத்த சொத்துக்கள்** | | | | **19,841,516.87** |
| | கடன்பாடுகள் நடைமுறைக் கடன்பாடுகள் | | | | |
| 20,000.00 | ஏற்பாடு செய்த கணக்கு பரிசோதனை | | | 40,000 | |
| 86,310.57 | அலுவலக உத்தியோகத்தர்களுக்கான கடன் | 12 | | 130,455.72 | |
| 994,018.36 | பொது வைப்பு | | | 1,370,041.46 | |
| 1,199,730.13 | இலாப மதிப்பீடு | 9 | | 616,543.37 | |
| 334,439.76 | “வடிஹிட்டி ஆவரண”மொத்தச் செலவு | 11 | | 393,337.76 | (2,550,378.31) |
| **13,058,102.06** | **மொத்த சொத்துக்கள்** | | | | **17,291,138.56** |
| | **தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு** | | | | |
| 13,384,766.51 | திரட்டப்பட்ட நிதி | | | 17,829,936.06 | |
| (1,274,958.90) | சேர்க்கப்பட்ட முந்திய வருட சீரமைவு | | | 31,227.10 | |
| 12,109,807.61 | தேறிய கையிருப்பு | | | 17,861,163.16 | |
| 948,294.45 | மூலதன மானியம் | | | (570,024.60) | |
| 13,058,102.06 | | | | | 17,291,138.56 |
| **13,058,102.06** | **மொத்த தேறிய சொத்துக்கள் /ஒப்புரவு** | | | | **17,291,138.56** |

கையொப்பம்,
ஆர்.எம்.டி.ரத்னாயக
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை

கையொப்பம்
ஜெ.கிருஸ்ணமூர்த்தி
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

பின்னிணைப்பு – 1 பி

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்
## 2011 மார்கழி 31 ம் திகதிய நிதி செயற்திறன் கூற்று

| 2010 (ரூ) | விபரணம் | குறிப்பு | 2011 (ரூ.) | 2011 (ரூ.) |
|---|---|---|---|---|
| | **வருவாய் ஈட்டல்** | | | |
| 66,115,000.00 | மீண்டுவரும் மானியம் | | 75,090,000.00 | 75,090,000.00 |
| - | **ஏனைய வருவாய்** | | - | |
| 505,404.90 | நிலையான வைப்பு வட்டி | | 417,347.83 | |
| 1,350.00 | அன்பளிப்புக்கள் | | 600.00 | |
| 366,913.00 | பல்வேறு வகைப்பட்ட வருவாய் | | 505,044.43 | 922,992.26 |
| **66,988,667.90** | | | | **76,012,992.26** |
| | **செலவுத் தொழிற்பாடு** | | | |
| 26,014,413.60 | தனிப்பட்ட வேதனாதிகள் | 1 | 29,470,577.21 | |
| 1,675,946.47 | பிரயாணங்கள் | 2 | 1,313,924.05 | |
| 1,610,012.28 | வழங்கல்களும் பயன்படுத்தப்பட்டவையும் | 3 | 1,785,185.57 | |
| 540,427.77 | பராமரிப்பு | 4 | 658,512.07 | |
| 6,824,128.24 | ஒப்பந்தச் சேவைகள் | 5 | 7,621,998.99 | |
| 27,644,441.53 | ஏனைய செலவு தொழிற்பாடு | 6 | 34,179,097.78 | |
| 1,731,003.56 | மதிப்பிறக்கம் | 7 | 1,553,721.19 | |
| **66,040,373.45** | **மொத்தச் செலவுகள்** | | | **76,583,016.86** |
| **948,294.45** | **நடப்பாண்டிற்கான தேறிய கையிருப்பு** | | | **(570,024.60)** |
| | | | | |

கையொப்பம்,
ஆர்.எம்.டி.ரத்னாயக
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை

கையொப்பம்
ஜெ.கிருஸ்ணமூர்த்தி
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

பின்னிணைப்பு – 1 ட

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்
## 2011 டிசம்பர் 31 திகதிய பணப்புழக்கக் கூற்று

| 2010<br>ரூபா | விபரணம் | 2011<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|
| | **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் பணப்புழக்கம்** | | |
| 442,889.55 | தொழிற்பாட்டு நடவடிக்கைப் பற்றாக்குறை | (987,372.43) | |
| | **பணம் சாராத இயக்கம்** | | |
| 1,731,003.56 | மதிப்பிறக்கம் | 1,553,721.19 | |
| (22,264.21) | எழுது பொருட்கள் கையிருப்புக்களின் உயர்வு | (259,673.16) | |
| 352,491.90 | தேய்மானக் குறைவு | - | |
| 903,779.00 | நடைமுறைச் சொத்துக்களின் குறைவு | - | |
| 87,397.50 | சீர் செய்யப்படாத முற்பணக் கொடுப்பனவு குறைவு | (796.00) | |
| - | சீர் செய்யப்படாத அனர்த்த முற்பணக் கொடுப்பனவு உயர்வு | (130,389.96) | |
| (16,000.00) | சீர் செய்யப்படாத உற்சவ முற்பணக் கொடுப்பனவு உயர்வு | (5,000.00) | |
| 1,459,124.35 | நடைமுறைச் சொத்துக்களின் குறைவு | (84,120.51) | |
| (1,274,958.90) | கடந்த வருடத்திற்கான சீரமைவு | - | |
| **3,663,462.75** | **நடைமுறை நடவடிக்கைகளிலிருந்து பணப்புழக்கம்** | | **86,369.13** |
| | **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| (2,778,662.88) | சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் கொள்வனவு | | (895,094.00) |
| 884,799.87 | **நிதி நடவடிக்கைகளில் இருந்து தேறிய பணப்புழக்கம்** | | (808,724.87) |
| - | | | - |
| 884,799.87 | தொடக்க காலப் பணமும் பணச் சமமதிப்பும் தொழிற்பாட்டு நடவடிக்கைப் பற்றாக்குறை | | (808,724.87) |
| 667,440.76 | தொடக்க காலப் பணமும் பணச் சமமதிப்பும் | | 1,552,240.63 |
| **1,552,240.63** | முடிவுக் காலப் பணமும் பணச் சமமதிப்பும் | | **743,515.76** |

கையொப்பம்,
ஆர்.எம்.டி.ரத்னாயக
தலைவர்
முதியோர்களுக்கான தேசிய சபை

கையொப்பம்
ஜெ.கிருஸ்ணமூர்த்தி
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

# மேலதிக பட்டியல்கள்

| 2010 ரூபா | விபரம் 1 | | தனிநபருக்கான சம்பளங்கள் | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 16,965,255.03 | | (I) | சம்பளங்களும் வேதனங்களும் | 17,387,307.38 |
| 2,696,194.94 | | (II) | ஊழியர் சேமலாப நிதியம் | 2,923,086.68 |
| 682,977.37 | | (III) | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 733,960.34 |
| 181,040.05 | | (IV) | மேலதிக நேரம் | 189,156.52 |
| 31,571.66 | | (V) | விடுமுறைக் கொடுப்பனவு | 44,589.14 |
| 5,457,374.55 | | (VII) | இடைக்காலக் கொடுப்பனவு | 7,287,423.04 |
| - | | (VI) | சம்பளங்களும் வேதனங்களும் | 905,054.11 |
| **26,014,413.60** | | | **மொத்தம்** | **29,470,577.21** |

| 2010 ரூபா | விபரம் 2 | | போக்குவரத்து செலவீனம் | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 1,552,329.97 | | (I) | உள்நாட்டு | 1,248,344.05 |
| 123,616.50 | | (II) | வெளிநாட்டு | 65,580.00 |
| **1,675,946.47** | | | **மொத்தம்** | **1,313,924.05** |

| 2010 ரூபா | விபரம் 3 | | வழங்குனர் மற்றும் பாவனையாளர் | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 1,166,176.78 | | (I) | அலுவலக எழுதுகருவி | 1,228,845.27 |
| 441,208.00 | | (II) | எரிபொருள் | 550,877.50 |
| 2,627.50 | | (III) | சீருடை | 5,462.80 |
| **1,610,012.28** | | | **மொத்தம்** | **1,785,185.57** |

| 2010 ரூபா | விபரம் 4 | | பராமரிப்பு செலவீனம் | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 405,242.77 | | (I) | வாகனம் | 562,953.07 |
| 135,185.00 | | (II) | இயந்திரம் | 95,559.00 |
| **540,427.77** | | | **மொத்தம்** | **658,512.07** |

| 2010 ரூபா | விபரம் 5 | ஒப்பந்தச் சேவை | | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 28,730.00 | | (I) | போக்குவரத்து | 19,600.00 |
| 459,018.34 | | (II) | தபால் மற்றும் தொலைத்தொடர்பு கொடுப்பனவு | 503,484.73 |
| 678,019.66 | | (III) | மின்சாரம் மற்றும் நீர் | 777,675.89 |
| 3,343,277.16 | | (IV) | வாடகை | 3,363,234.16 |
| 130,312.00 | | (V) | துப்பரவுச் சேவை | 130,275.00 |
| 89,051.00 | | (VI) | பத்திரிகைச் சேவை | 75,070.00 |
| 85,833.50 | | (VII) | பொழுதுபோக்குச் செலவு | 117,899.80 |
| 20,000.00 | | (VIII) | கணக்கீட்டுச் செலவு | 20,000.00 |
| 170,033.08 | | (IX) | காவலாளிச் செலவு | 212,403.27 |
| 68,000.000 | | (X) | பேரவை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு | 501,200.00 |
| 617,856.50 | | (XI) | சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு | 736,000.00 |
| 1,133,997.00 | | (XII) | ஏனைய கொடுப்பனவுகள் | 1,165,156.14 |
| **6,824,128.24** | | | **மொத்தம்** | **7,621,998.99** |

| 2010 ரூபா | விபரம் 6 | ஏனைய செயற்பாட்டுச் செலவீனம் | | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 1,895,500.00 | | (I) | முதியோர் குழுக்களை அமைத்தல். | 2,132,803.00 |
| 1,043,361.50 | | (II) | முதியோர் அடையாள அட்டைகள் வழங்குதல் | 693,008.00 |
| 859,000.00 | | (III) | பகல் நேர முதியோர் பராமரிப்பு நிலையங்களை நிறுவுதல் | 734,750.00 |
| 634,356.00 | | (IV) | வெளியீடுகளும் விநியோகங்களும் | 533,618.20 |
| 1,678,795.50 | | (V) | பயிற்சி நிகழ்ச்சி மற்றும் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சி | 4,284,418.00 |
| 8,581.596.90 | | (VI) | மருத்துவச் சிகிச்சைகள் மற்றும் கண்வில்லை வழங்குதல். | 10,851,494.00 |
| 1,004,166.80 | | (VII) | சர்வதேச முதியோர் தினம் | 1,347,265.00 |
| 1,335,299.39 | | (VIII) | முதியோர் இல்லங்களுக்காக நிதியுதவி வழங்குதல். | 1,596,835.58 |
| 10,264,995.44 | | (IX) | மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தல் | 11,414,732.70 |
| 347,370.00 | | (X) | பயிற்சி மற்றும் ஆற்றல் கட்டியமைப்பு | 590,173.30 |
| **27,644,441.53** | | | **மொத்தம்** | **34,179,097.78** |

| 2010. | விபரம் 7 | தொகை | | 12/31/2011 |
|---|---|---|---|---|
| 1,075,241.76 | | (I) | தளபாடம் மற்றும் காரியாலய உபகரணம் | 1,032,318.79 |
| - | | (II) | கட்டிடம் | - |
| 285,000.00 | | (III) | வாகனம் | 285,000.00 |
| 370,761.80 | | (IV) | அலுவலக உபகரணம் | 236,402.40 |
| **1,731,003.56** | | | **மொத்தம்** | **1,553,721.19** |

| 2009 ரூபா | விபரம் 8 | வங்கிக் கணக்கு | | 12/31/2010 ரூபா |
|---|---|---|---|---|
| 1,064,693.71 | | (I) | வங்கியில் உள்ள காசு AC.No. 228075 | 152,925.69 |
| 401,236.35 | | (II) | வங்கியில் உள்ள காசு AC.No. 5234881 | 460,134.35 |
| 86,310.57 | | (II) | வங்கியில் உள்ள காசு AC.No. 9179076 | 130,455.72 |
| **1,552,240.63** | | | மொத்தம் | மொத்தம் |

| 2010 ரூபா | குறிப்பு 9 | மீள் எழும் செலவினங்கள் | | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 347,963.00 | | (I) | செலுத்தப்பட வேண்டிய போக்குவரத்துச் செலவீனம் | 234,423.00 |
| 141,175.00 | | (II) | செலுத்தப்பட வேண்டிய அடையாள அட்டை செலவீனம் | - |
| - | | (III) | செலுத்த வேண்டிய COL கொடுப்பனவு | 31,651.20 |
| - | | (IV) | செலுத்தப்பட வேண்டிய விடுமுறைக் கொடுப்பனவு | 15,036.25 |
| 7,601.00 | | (V) | செலுத்தப்பட வேண்டிய மேலதிகக் கொடுப்பனவு | 6,046.87 |
| 55,000.00 | | (VI) | செலுத்தப்பட வேண்டிய சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு | 68,000.00 |
| 43,068.62 | | (VII) | செலுத்தப்பட வேண்டிய தபால் மற்றும் தொலைத்தொடர்பு கொடுப்பனவு | 30,791.16 |
| - | | (VIII) | செலுத்தப்பட வேண்டிய காவலாளிக் கொடுப்பனவு | 16,174.89 |
| 12,600.00 | | (IX) | செலுத்தப்பட வேண்டிய துப்புரவுச் செலவுக் கொடுப்பனவு | - |
| 3,860.00 | | (X) | செலுத்தப்பட வேண்டிய பத்திரிகைக் கொடுப்பனவு | 4,075.00 |
| 6,888 | | (XI) | செலுத்தப்பட வேண்டிய பயிற்சி நிகழ்ச்சிக் கொடுப்பனவு | - |
| 194,500.00 | | (XII) | செலுத்தப்பட வேண்டிய கண்வில்லை மற்றும் கிளினிக் கொடுப்பனவு | - |
| 24,532.32 | | (XIII) | செலுத்தப்பட வேண்டிய மின்சாரம் மற்றும் நீர்க் கொடுப்பனவு | 42,456.50 |
| 25,000.00 | | (XIV) | செலுத்தப்பட வேண்டிய பகல் நேர பராமரிப்பு நிலைய நிதியுதவி | - |
| 188,075.00 | | (XV) | செலுத்தப்பட வேண்டிய முதியோர் இல்ல நிதியுதவி | 81,288.50 |
| 500.00 | | (XVI) | செலுத்தப்பட வேண்டிய வேறு கொடுப்பனவுகள | 3,750.00 |
| 88,254.99 | | (XVII) | செலுத்தப்பட வேண்டிய தபாற் செலவு | 82,850.00 |
| 4,500.00 | | (XVIII) | செலுத்தப்பட வேண்டிய சாப்பாட்டுச் செலவீனங்கள் | - |
| 1,033.20 | | (XIX) | செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | - |
| 55,179.00 | | (XX) | செலுத்தப்பட வேண்டிய வாகன பராமரிப்பு | - |
| **1,199,730.13** | | | மொத்தம் | **616,543.37** |

| 2010 ரூபா | விபரம் 10 | செலுத்தப்படாத முற்பணம் | | 12/31/2011 ரூபா |
|---|---|---|---|---|
| 200.00 | | (I) | சுனில் கல்ஹேன | - |
| 4.00 | | (II) | பியந்தி ராஜபுர | - |
| - | | (III) | எஸ்.வை.கமஹே | 1,000.00 |
| **204.00** | | | மொத்தம் | **1,000.00** |

# கணக்காளர் நாயகத்தின் அபிப்பிராயம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் சுற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டத்தின் 20(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கைச சபையின் தலைவருக்கு 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியல் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதியோர்களுக்கான தேசிய சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஆண்டு அறிக்கை - 2011

ஈஎல்/ஏ/என்சீஈ/எப்ஏ/2011

2012 ஒக்தோபர் 31

தலைவர்,

முதியோருக்கான தேசிய சபை

முதியோருக்கான தேசிய சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

முதியோருக்கான தேசிய சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக்கூற்று, உரிமை முலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள், ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச் சட்டத்தின் 20(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

83

ஆண்டு அறிக்கை - 2011

கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றது.

84

ஆண்டு அறிக்கை - 2011

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதியோருக்கான தேசிய சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்று தொடர்பான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 7,615,372 கிரயமான தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும், ரூபா 7,450,000 பெறுமதியான வாகனங்கள் மற்றும் ரூபா 2,301,809 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆண்டு அறிக்கை - 2011

(i) காலப்பகுதியின் ஆரம்பத்தில் திரண்ட பெறுமானத் தேய்வு

(ii) கீழே காணப்படுகின்றவைகளைக் காட்டும் காலப் பகுதியின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் காணப்படுகின்ற பெறுமதிகளின் இணக்கம்

- கூட்டல்கள்
- பெறுமானத்தேய்வு

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 24 இன் பிரகாரம் 2011 நவம்பர் 30 ஆம் திகதி பெறப்பட்ட டொயோட்டா யாரிஸ் காரின் பெறுமதியான ரூபா 4,600,000 தொகை அரசாங்க மானியம் (மூலதனம்) கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறப்பட்ட கண் வில்லைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 906,100 தொகையானது அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்படாமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்களில் அவற்றுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆண்டு அறிக்கை - 2011

2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) அரசாங்க நிதிப்பிரமாணம் நி.பி 396 | மே 05 ஆந் திகதிய காசோலை இல. 154146 உடைய ரூபா 600 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்தும் நி.பி இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) பெறுவனவு வழிகாட்டிக் கோவை | பெறுவனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கிய சகல நிறுவனங்களிலும் கூறுவிலைகள் கோரப்பட்டு கொள்வனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 10,704,758 பெறுமதியான கண் வில்லைகள் நேரடியாக இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |

87

ஆண்டு அறிக்கை - 2011

| | விபரம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | | |
| | (i) தளபாடமும் உபகரணங்களும் | 7,168,278 | விபரமான பட்டோலை |
| | (ii) இயந்திரமும் உபகரணங்களும் | 2,301,809 | |
| (ஆ) | கடன்கொடுத்தோர் | 616,543 | கடன்கொடுத்தோர் பதிவேடு |
| (இ) | ரூபா 5000 படி 57 முதியோரர் குழுக்களுக்காக காசு வழங்குதல் | 285,000 | (i) 08 காசோலைகளுக்குரிய பணம் பெறப்பட்டமையை உறுதிப்படுத்தல்<br>(ii) சேமிப்பு வங்கியொன்றில் ரூபா 3,500 மீதி பேணப்படுகின்றமைக்காக 236 முதியோரர் குழுக்களிலிருந்து ரூபா 826,000 தொகைக்கான உறுதிப்படுத்தல். |
| (ஈ) | முதியோர் இல்ல நிர்மாணம் மற்றும் திருத்தங்கள் | 8,395,883 | 20 முதியோர் இல்லங்களின் நிர்மாணம் மற்றும் திருத்தங்கள் போன்ற செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட தொகை தொடர்பாக உரிய செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டமைக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்ட வேலை அறிக்கை மீளாய்வாண்டின் இறுதியில் அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

88

ஆண்டு அறிக்கை - 2011

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபை நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 570,025 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 948,294 ஆகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,518,319 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. இவ் வீழ்ச்சிக்கு ஒப்பந்த சேவைகள் ரூபா 797,871 இனாலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 6,534,656 இனாலும் அதிகரித்தமை இவ்வதிகரிப்பிற்கு காரணமாயிருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

2011 ஆம் ஆண்டின் போது முதியோருக்கான தேசிய சபையின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சர்வதேச முதியோர் தின விழா – 2011

2011 ஒக்தோபர் 01 ஆந் திகதி சர்வதேச முதியோர் தின விழாவிற்காக ரூபா 2,751,265 தொகை செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன் அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(i) முதியோர் தினத்திற்காக பாடசாலை மட்டத்தில் நாடளாவிய ரீதியில் நாடகம்/ கட்டுரை/ சித்திரம் மற்றும் இசை அமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

ஆண்டு அறிக்கை - 2011

(ii) முதியோர் தினத்திற்காக பிரதேச செயலகங்களின் சமூக சேவை உத்தியோகத்தர்களினால் பாடசாலை மட்டத்தில் பயனுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பராமரிப்பு நிலையங்களுக்காக உதவிப் பணம் வழங்குதல்

மீளாய்வாண்டின் போது 26 முதியோர் பராமரிப்பு நிலையங்களுக்காக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 25,000 படி வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் பெறப்பட்டமைக்கும், அப்பணம் உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டமைக்கும் 14 நிலையங்களிலிருந்து எழுத்து மூல உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) வருமானம் உழைக்கும் செயற்பாடுகளுக்காக உதவிப் பணம் வழங்குதல்

சுய தொழில் வருமானங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்காக 55 நபர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் ஆண்டின் இறுதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அச்சிடல் செயற்பாடுகள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 1000 பிரதி சஞ்சிகைகளை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 750 பிரதி சஞ்சிகைகள் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்தன.

(ii) 2011 ஆம் ஆண்டில் முதியோர் அதிகாரச்சட்டம் திருத்தப்பட்டிருந்ததுடன் அதில் 5,000 பிரதிகளைக் கொள்வனவு செய்து பகிர்ந்தளிப்பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முதியோர் அடையாள அட்டைகளை விநியோகித்தல்

40,000 முதியோர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 51,000 அட்டைகள் அச்சிடப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 31,125 அடையாள அட்டைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட அடையாள அட்டைகளை விஞ்சி 11,000 அட்டைகள் அச்சிடப்பட்டிருந்தன.

(ஊ) அறிவூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் 107 அறிவூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதி வரையிலும் 23 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) தெற்கில் சுனாமி பேரழிவிற்கு உட்பட்ட பிரதேசத்திற்காக விசேட பராமரிப்புச் சபையை நியமிப்பதற்காக 2008 யூன் 06 ஆந் திகதி நடைபெற்ற முதியோர்களுக்கான தேசிய சபையின் தீர்மானத்தின் பிரகாரம் சமூக சேவைகள் அமைச்சினால் 2009 திசெம்பர் 22 ஆந் திகதி நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் 2010 பெப்ரவரி 18 ஆந் திகதி நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அது உரிய பிரகாரம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

"தெற்கில் சுனாமி பாதிப்புக்குள்ளான பிரதேசத்திற்காக விசேட பராமரிப்புச் சபையை நியமிப்பதற்கு நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் உரிய அங்கத்தவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் போதியளவாக இல்லாமையினால் அதற்காக உறுப்பினர்களை நியமிப்பதற்கு

ஆண்டு அறிக்கை - 2011

முடியாதிருந்தது." என தேசிய சபையின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டில் கண்வில்லைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் நிறுவனத்திற்குக் கிடைத்திருந்த போதிலும் 130 விண்ணப்பங்களுக்காக கொள்வனவு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த வில்லைப் பயனாளிகளுக்கு அவைகள் வழங்கப்படாமைக்கான காரணம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டமைக்கான தகவல்களும் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் முதல் காலாண்டில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 4.3 அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்கள்

மூன்று நபர்களினால் தேசிய முதியோர் செயலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களை சட்டரீதியாக அரசாங்கத்திற்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் அந்த சொத்துக்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட நோக்கங்களில் ஈடுபடுத்துதல் மீளாய்வாண்டின் இறுதியிலும் நடைபெற்றிராமையினால் எதிர்காலத்தில் எதையாவது கையளித்தவர்களின் உயிருக்கு நிச்சயமற்றதன்மை ஏற்படுமாயின் சொத்துக்களைக் கையேற்பதில் சிக்கல்களுக்குள்ளாக வேண்டியிருந்தமையும் அவதானிக்கப்படுகின்றது.

| அன்பளிப்புச் செய்யப்பட்ட திகதி | அளவு | கையளித்தல் உறுதியில் குறிப்பிடப்பட்ட நோக்கம் | அமைந்துள்ள பிரதேசம் |
|---|---|---|---|
| 2006.07.31 | 03 றூட் 15.6 பேர்சஸ் | முதியோர் தங்குமிடமொன்றை ஆரம்பிப்பதற்கு | புத்பிட்டிய |
| 2009.03.17<br>2011.02.12 | 02 ஏக்கர்<br>17.11 பேர்சஸ் | | ஹோமாகம<br>கம்பஹா |



92
முதியோர்களுக்கான தேசிய சபை

ஆண்டு அறிக்கை - 2011

4.4 ஊழியர் பணிக்கொடை

மீளாய்வாண்டில் திருத்தப்பட்ட இறுதிக் கணக்குக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பணிக்கொடை ஏற்பாட்டு ஒதுக்கீடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்குரிய பட்டியல்களின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட மொத்த பணிக்கொடைப் பெறுமதி ரூபா 5,432,276 ஆக இருந்தும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட மொத்த பணிக்கொடைப் பெறுமதி ரூபா 5,111,872 ஆனமையால் ரூபா 320,404 இனால் மிகை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஏனைய படிகளை அதிகரித்துக் காண்பித்தல்

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஏனைய படிகள் உத்தியோகத்தர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 5% ஆக இருந்தும் பணிக்கொடை ஏற்பாடு கணிப்பீடு செய்யும் போது ஏனைய படிகளாக அடிப்படைச் சம்பளத்தில் 15% ஆக கருதப்பட்டிருந்தது.

(இ) பணிக்கொடை ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமை

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபட்டிருக்கின்ற மூன்று உத்தியோகத்தர்களுக்காக ரூபா 41,835 தொகையான பணிக்கொடை ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

93

ஆண்டு அறிக்கை - 2011

5. கணக்களிதன்மையும் உள்ளகக் கட்டுப்பாடும்

5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

தேசிய சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் பிரதான செயற்பாடுகளுக்கிடையே பராமரிப்புச் சபைகளினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

தேசிய சயில் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.3 முதியோர்களுக்காக பொதுப் போக்குவரத்துக் கட்டணத்தில் 50% இனை குறைத்தல்

2006 மே 04 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தின் 06/0678/227/019 ஆம் இலக்கத்தினால் முதியோருக்காக பொதுப் போக்குவரத்துக் கட்டணத்தை 50% ஆக ஆக்குவதற்காக முன்னாள் புகையிரத மற்றும் போக்குவரத்து அமைச்சர் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் என்போரினால் 2006 மார்ச் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒன்றிணைந்த வேண்டுதலுக்காக 2006 மே 04 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

புகையிரத அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்காக திறைசேரியிடமிருந்து உரிய தொகையை மீளளிப்புச் செய்வதற்கு இணங்கப்படாமையினாலும் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளுக்காக உரிய டிப்போக்களில் 50% அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு பயணிக்கும் தேவைப்பாட்டின் படி இலங்கை போக்குவரத்து சேவை பஸ் வண்டிகளில் மாத்திரம் பிரயாணம் மேற்கொள்வது கடினமானதாகையால் இந் நிகழ்ச்சித்திட்டத்தையும் அமுல்படுத்த முடியாதிருந்ததாக தேசிய சபையின் தலைவரினால் எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆண்டு அறிக்கை - 2011

5.4 தகவல் முறைமையொன்றைத் தயாரித்தல்

முதியோர் சனத்தொகை தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் தரவு முறைமையொன்று தேசிய சபையினால் தயாரிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்படுகின்றது.

5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் முழுமையான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு முறைமையாக பாதீடு ஈடுபடுத்தப்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கண் வில்லைகளைப் பெற்றுக் கொள்ளல்

(ஆ) சிரேஷ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதிய உத்தேசத் திட்டம்

(இ) கேட்டல் உபகரணங்களை வழங்குதல்

ஒப்பம் : எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஆண்டு அறிக்கை - 2011

සමාජ සේවා අමාත්‍යාංශය
சமூக சேவைகள் அமைச்சு
Ministry of Social Services
ජාතික වැඩිහිටි මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
**National Secretariat for Elders**

මගේ අංකය / எனது இல / My No. | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகதி / Date

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வுத் திணைக்களம்,
கொழும்பு 07.

**கணக்காய்வு அறிக்கை**

**முதியோருக்கான தேசிய சபையின் 31.12.2011 க்கான நிதிப் பிரமாணம்**
**1971 ஆண்டின் 38 இலக்க நிதிச் சட்ட மூலத்தின்**
**14(2)(c) ம் பிரிவின் படி நிதி கூற்றுக்கான கணக்காய்வு அறிக்கை**

**2.2 நிதிக் கூற்றின் கருத்துக்களை வெளிப்படுத்தல்**

**2.2.1 இலங்கை கணக்கிடல் தரம்**

a. தளபாடங்களினதும், அலுவலக உபகரணங்களினதும் தேய்மானப் பெறுமதி ரூபா. 7,615,372/= வாகனங்களின் தேய்மானம் ரூபா. 7,450,000/=, இயந்திராதிகளின் தேய்மானம் ரூபா. 2,301,809/=, ஆகியவற்றின் விபரங்கள் தனியான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி 2011 ஆம் வருடத்திற்கான தேய்மானக் கணக்கிடல் தொடர்பான கணக்கீடுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. 2012ம் வருடத்திற்கான நிதிக் கணக்குகளுடன் தேய்மானக் கணக்கீடுகளும் தனியான உப-அட்டவணை (இணைப்பு 01) ஆக அனுப்புவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

b. 2012ம் வருடத்திற்கான பொதுப் பேரேட்டில் வாகனங்களின் பெறுமதியான ரூபா. 4600,000/= பற்றில் வைக்கப்பட்டுள்ளது.

**2.2.2 கணக்கீட்டு முறைமையிலுள்ள குறைபாடுகள்**

a. 2011 ஆம் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் 2012.02.28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததால், அந் நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது 31.01.2012 வரையுள்ள செம்மதிச் செலவுக் கணக்குகள் மட்டுமே கணக்கிடப்பட்டது. 2012ம் வருடத்திற்குரிய நிதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சம்பந்தப்பட்ட பதிவிலுள்ள விபரங்கள் கணக்கிடப்படும்.

47

ලිපිනය : 150 A, එල්. එච්. පී. ගොඩනැගිල්ල, නාවල පාර, නුගේගොඩ.
முகவரி : 150 ஏ, எல். எச். பி. கட்டடம், நாவல வீதி, நுகேகொடை.
Address : 150 A, L. H. P. Building, Nawala Road, Nugegoda.
ඊ-මේල් / ஈ-மெயில் / E-mail : nsemss@sltnet.lk
දුරකථන / தொலைபேசி / Telephone :
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director : 2826749
කාර්යාලය / அலுவலகம் / Office : 2824082
ෆැක්ස් / பெக்ஸ் / Fax : 2826750

96
முதியோர்களுக்கான தேசிய சபை

ஆண்டு அறிக்கை - 2011

b. 2010 வருடத்தில் தேய்மானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகளைத் திருத்தம் செய்யும் போது, மேலதிகமாக ரூபா. 5000/= கணக்கிடப்பட்டுள்ளது. சென்ற வருட இலாபத்தில் இப் பிழையினால் ஏற்பட்ட தாக்கத்தினை நிவர்த்தி செய்வதற்காக 2012 ஆம் வருட நிதிக் கணக்கினூடாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

c. 2012 ஆம் வருட இறுதி நிதிக் கணக்குகளைத் தயார் செய்யும் பொழுது வங்கி கட்டணங்களும் கணக்கிடப்படும்.

d. வங்கிக் கணக்கிற்கான நேரடிச் செலுத்தல்களை இனங்காணப்பட்டிருப்பதுடன், அவைகள் 2012 ஆம் வருடத்திற்கான கணக்குகளில் பதிவிலிடப்படும்.

e. 2012 ஆம் வருட இறுதி கணக்குகளைத் தயாரிக்கும் போது, சென்ற வருட இலாபத்தில் செம்மை செய்யப்படதுடன், கணக்கிடப்பட்டுமுள்ளது.

2.2.3 கணக்காய்வதற்கான சான்றுகள் இல்லாமை

a. நிலையான சொத்துக்கள்

i. தளபாடங்களும், உபகரணங்களும் ரூபா. 7,168,278/=.

ii. இயந்திராதிகள் ரூபா. 2,301,809/=

விபரங்களடங்கிய உப-அட்டவணைகள் தற்பொழுது தயாரிக்கப்படுகின்றன.

b. கடன்கொடுத்தோர்கள் - சென்மதி செலவுகளான ரூபா. 616,543/= வினை ரூபா. 61,6543/= ஆக பதியப்பட்டுள்ளது. 2011 ஆம் வருடத்திற்கான இறுதி நிதிக் கூற்றின் உப-அட்டவணை இல. 09 இல் இத் தொகை எவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது என்பதனையிட்ட விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

c. i. 2011ம் வருடத்தில் 385 கிராமிய முதியோர் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா. 5000/= வீதம் வழங்கப்பட்டன. இதற்காக ரூபா. 1,925,000/= செலவிடப்பட்டது. இத் தொகை 85 காசோலைகள் மூலம் வழங்கப்பட்டதுடன், 76 காசோலைகளுக்கான பற்றுச்சீட்டுகளும் அனுப்பப்பட்டுள்ளன.

ii. முதியோர் தேசிய செயலகத்தின் 1/2011 ஆம் இலக்க சுற்று நிருபத்தின் படி, ரூபா. 3,500/= தேசிய சேமிப்பு வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டிருத்தல் வேண்டும். இதன்படி, 149 முதியோர் குழுக்கள் இத் அத்தொகையினை வைப்பிலிட்டதாக செயலகத்திற்கு அறிவித்துள்ளன. இவ் விடயம் தொடர்பாக மீதியான முதியோர் குழுக்களிடம் விசாரணைகள் செய்யப்பட்டன. (இணைப்பு 02)

d. கண்ணாடிகளை வழங்கல்

சத்திர சிகிச்சைக்குட்பட்ட இந் நோயாளிகள் விண்ணப்ப படிவத்தினைப் பூர்த்தி செய்து, மருத்துவ நோய் விபர அறிக்கையுடன் சமர்ப்பித்துள்ளார்கள்.

e. முதியோர் இல்லங்களை நிர்மாணத்தலும், புதிப்பித்தலும்

20 முதியோர் இல்லங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூபா. 8,395,883/= வினை தகுந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என பற்றுச்சீட்டில் தொழில்நுட்ப அதிகாரி ஒப்பமிட்டுள்ளார். தனியான தொழில் நுட்ப அறிக்கை இதற்காக பெறப்படவில்லை.

97

ஆண்டு அறிக்கை - 2011

f. செய்திப் பத்திரிகை விளம்பரங்கள் - 8250

7148 பத்திரிகை விளம்பரங்கள் கிராமிய முதியோர் குழுக்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டன. அவ் ஆவணங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 02)

2.2.4 நியதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் ஆகியவற்றினைப் பின்பற்றாமை

a. 1983ம் ஆண்டு 12ம் இல. பணக்கொடை கொடுப்பனவின் 03 ஆம் பிரிவு

பணக்கொடை கொடுப்பனவுகளுக்காக நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

b. அரசாங்க நிதிப் பிரமாணங்கள்

i. நி.பி. 225 (1)

நிதிப் பிரமாணங்களின் படி, கொடுப்பனவுகள் உரிய மாதரிப் பத்திரங்கள்
மூலமே செலுத்தப்பட்டுள்ளன. தொடர்புள்ள மாதரிப் பத்திரங்களைப் பயன்படுத்தும் நிதிப் பிரமாணங்களை மீறியது பற்றி வெளிப்பாடுகள் தோன்றவில்லை.

ii. நி.பி. 396

நி.பி. 396 க்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

c. அரச நிர்வாக சுற்றுநிருபம்

PED/2012 7.4.1 ஆம் இல. 2003 யூன் 02 ஆந் திகதியுடையது
மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி வருடமொன்றிக்கு 04 கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டுமாயினும், உள்ளக கணக்காய்வாளர் இல்லாமையினால் மூன்று கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன.

d. திறைச்சேரி சுற்றுநிருபங்கள்

1978ம் வருட டிசெம்பர் 19 ஆந் திகதியுடைய திறைச்சேரி சுற்றுநிருபம் இல. 842

நிலையான சொத்துக்களின் பதிவேட்டினை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

e. கொடுப்பனவு செயல்முறை

முதியோருக்கான தேசிய சபை ஆரம்பிக்கப்பட்ட 2004 ஆம் வருடத்திலிருந்து 2011ம் ஆண்டு இறுதிவரை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் "ஓசுசல" விடமிருந்து மருந்துகள் அடிக்கடி கொள்வனவு செய்யப்பட்டன. இது சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட முகவரின் சிபார்சுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் கண்ணாடிகளின் தரத்தினைப் பற்றி மருத்துவர்களினால் செய்யப்பட்ட சிபார்சுகளின்படி, 2012 ஆம் வருடத்திலிருந்து பொருள் கொள்வனவு செயல்முறைப் பிரகாரம் கொள்வனவுகள் செய்யப்பட்டன.

f. முதியோருக்கான தேசிய சபை பணிப்பாளரின் 26.01.2011 திகதியுடைய சுற்றுநிருபத்தின் மூன்றாவது (iii) பந்தி
மேற்குறிப்பிடப்பட்ட சுற்றுநிருபத்தின் படி எவையேனும் வங்கி ஒன்றில் ரூபா 3,500/= சேமிப்புக் கணக்கில் வைப்பிலிட வேண்டும். அதன்படி 122 முதியோர் குழுக்களின் நிதியினை வைப்பிலிடுவது தொடர்பாக சான்றுகள் வழங்கப்படடுள்ளன.

98

மீதியாகவுள்ள 263 முதியோர் குழுக்களுக்களின் பணத்தினை வைப்பிலிட்டது தொடர்பாக உறுதி செய்யப்பட்ட வேண்டியுள்ளது. இது தொடர்பான தகவல்களைக் கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.(இணைப்பு 04)

2:2:5 அதிகாரத்தினால் தகுந்தவாறு அனுமதிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியோடு முதியோருக்கான தேசிய சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி, தவிசாளருக்கும், செயலாளருக்குமான கொடுப்பனவுகள் 2008 யூலையிலிருந்து 2011 மார்ச்வரை முறையே ரூபா. 25,000/= வினாலும் ரூபா. 15,000/= வினாலும் அதிகரிக்கப்பட்டன. இச் செலவிற்கான அனுமதி, முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அவரது 23.05.2011 திகதியுடைய கடிதத்தினால் வழங்கப்பட்டுள்ளது. (தொடர்பு இல. DMS/E3/20/4/404/2)

3.0 நிதிசார் ஆய்வு

3.1 நிதியின் விளைவுகள்

சென்ற வருடத்துடன், கணக்காய்விற்கு உட்பட்ட வருடத்தை ஒப்பிடும் பொழுது, ஒப்பந்த சேவையில் ரூபா. 79,7871/= ம் ஏனைய செயற்பாடுகளிலும் ரூபா. 6534656/= உம் பின்வரும் காரணங்களுக்காக அதிகரித்துள்ளன.

- தேசிய சபையின் உறுப்பினர்களக்கான கொடுப்பனவில் அதிகரிப்பு
- பராமரிப்புச் சபையின் உறுப்பினர்களின் அங்கத்துவக் கட்டணங்களில் அதிகரிப்பு
- அலுவலக கடமைகளின் அதிகரிப்புக் காரணமாக மேலதிகச் முத்திரைகளைக் கொள்வனவு செய்தல்
- தேசிய சபையின் வேலைப்பழு அதிகரிப்பு காரணமாக தொலைபேசிக்கான மேலதிக செலவு
- பாதுகாப்பு, துப்புரவு செய்தல், நீர் வரி, மின்சார வரி ஆகியன வழங்குவதற்கான கட்டணங்களின் அதிகரிப்பு

4.0 செயற்பாடு மீள்பார்வை

4.1 வேலை செயற்திறன்

1. கிராமிய மட்டத்தில் முதியோர் குழுக்கனை நிறுவுதல்

   திறைச்சேரியினால் நிதி ஒதுக்கீட்டின் படி பணம் வழங்கப்படாமையால், எதிர்பாத்தவாறு வேலையை நிறைவேற்ற முடியவில்லை.

2. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

   24 ஆற்றுபடுத்தல் சேவைகள், 77 பிராந்திய மட்ட கல்வியூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், 02 வீட்டு உதவியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்சித்திட்டங்கள், 04 ஓய்வுபெறுவதற்கு முன்னரான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றினை நடத்தத் திட்டமிட்டிருந்தாலும், பின்வரும் நடவடிக்கைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டன.

   ஆற்றுப்படுத்தல் சேவைகள் - - - - - - -18
   பிராந்திய மட்ட கல்வியூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் - - - 135
   வீட்டு உதவியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்சித்திட்டங்கள்- - - -01
   ஓய்வுபெறுவதற்கு முன்னரான விளிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் - -03
   முதியோருக்கு உதவிசெய்வதற்காக தகம் பாடசாலை
   மாணவர்களுக்கான கல்வி - - - - - ------------785

a சர்வதேச முதியோர் தின விழாக்கள் - 2011

ஹெல்பேஜ்ஜுடன் ஆரம்ப கலந்துரையாடல் நடத்தப்பட்டு, சர்வதேச முதியோர் தினத்தினைக் கொண்டாடுவதற்கான செலவாக சுமார் ரூபா. 1,247,000/= மதிப்பிடப்பட்டு அனுப்பப்பட்டது. ஆயினும் தேசிய விழாவிறகாக பின்வரும் செலவுகள் செய்யப்பட வேண்டியும் ஏற்றபட்டது.

i. 93 பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றிக்கும் ரூபா. 10,000/= வீதம் -ரூபா.930,000/=

ii. ஜா - எல பிரதேச செயலகத்திற்கு - - - - ரூபா. 25,000/=

iii. களுத்தறை பிரதேச செயலகத்திற்கு - - - - ரூபா. 28,000/=

iv. மீரிகமை பிரதேச செயலகத்திற்கு - - - ரூபா. 15,000/=

விழாக்களை ஏற்பாடு செய்வதற்காக 97 பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட்ட தொகை ரூபா. 998,000/=

-----------------

. தேசிய விழாக்களுக்கான ஏனைய செலவுகள் - - ரூபா. 349,265/=

------------------

முதியோருக்கான தேசிய சபைக்கு ஏற்பட்ட செலவுகள் - - ரூபா. 1,347,265/=

பத்திரிகை அனுபந்தத்தினைப் பிரசுரிப்பதற்காக உலக சுகதார நிலையத்தினால் வழங்கப்பட்ட தொகை - - - - ரூபா. 1,404,000/=

---------------------

மொத்தச் செலவுகள் (1,347.265/= + 1,404,000/=) ரூபா. 2,751,265/=

---------------------

ii. தேசிய நடவடிக்கைத் திட்டத்தின் படி, தேசிய விழாவிற்காக ரூபா. 10 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தாலும், பிராந்திய மட்டத்தில் இவ் விழாவிற்காக மேலதிக நிதிக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டதனால், ரூபா. 1.35 மில்லியன் செலவிட வேண்டியேற்பட்டது.

iii. தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்திற்குச் சமமாக, அனுராதபுர மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 110 அறநெறி பாடசாலைகள் மாணவர்களுக்கு முதியோருக்கு உதவும் வழிகளையும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்பூட்டல் செய்யப்பட்டது.

சர்வதேச முதியோர் தினத்திற்காக 135 பிரதேச செயலங்களுக்குள் உள்ளடங்கிய 675 தகம் பாடசாலைகள் மாணவர்களுக்கு, முதியோருக்கு உதவும் வழிகளையும், அதன் முக்கியத்துவத்தைப்பற்றிய விழிப்பூட்டல் செய்யப்பட்டது.

iv. இந் நிறுவனத்தினால் நிதி செலவழித்து செய்திப் பத்திரிகை விளம்பரம் வெளியடப்படாவிட்டாலும். உலக சுகாதார நிலையம் பணம் செலவிட்டு 12 பக்கங்கள் கொண்ட செய்திப் பத்திரிகை அனுபந்தத்தினை வெளியிட்டது. உலக சுகாதார நிலையத்திற்கு பெறுமதி சேர் வரி செலுத்துவதிலிருந்து விதிவிலக்கிருப்பதால், அந் நிலையம் இவ் வரியினைச் செலுத்தவில்லை.

b. நாள் காப்பகங்களுக்கு நிதியுதவி அளித்தல்

2011 ஆம் வருடத்தில், 26 நாள் காப்பகங்களுக்கு இயந்திராதிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 25,000/= வழங்கப்பட்டது. 12 நாள் காப்பகங்கள் இது தொடர்பான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய இந் நிதியினைப் பயன்படுத்தியதற்கான நிருபண ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ளன. 14 நாள் காப்பகங்களுக்கு இப் பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது என்பதற்கான நிருபண ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

c. பணம் ஈட்டும் நடவடிக்களுக்கான நிதியுதவி வழங்கல்

திறைச்சேரியினால் நிதி வழுங்கப்படாததினால் 2011 வருட மத்தியிலிருந்து சுயதொழில் திட்டங்களுக்கான நிதியுதவியளித்தல் நிறுத்தப்பட்டது.

d. அச்சிடும் நடவடிக்கைகள்

i 2011 ஆம் ஆண்டில் முதியோர்களின் உரிமைகளின் பாதுகாப்புகள் சட்டத்தின் திருத்தங்கள் அனுமதிக்கப்பட்டாலும், தேர்தல்கள் நடைபெற்றதன் காரமாணமாக அவைகளை அச்சிடும் அச்சகத்தில் தாமதமேற்பட்டது. எனவே இந் நடவடிக்கையினை கணக்காய்விலுள்ள வருடத்தில் பூர்த்திய செய்யமுடியவில்லை.

ii. 2005ம் வருடத்திலிருந்து 2009 ஆம் வரை நிர்வாக அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை.

1775 நிர்வாக அறிக்கைகள் அரச வணிக செயற்குழுக்களுக்கு அவசரமாக விநியோகிக்கவிருந்ததால். அவைகளை நடவடிக்கை அட்டவணையில் உள்ளடக்கப்படவில்லை.

iii. முதியோரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத் திருத்தத்தின் 5000 பிரதிகள் 2002.01.09 இல் அச்சிடப்பட்டது. இவைகளில் 4400 பிரதிகள் வினியோகிக்கப்பட்டன. மீதியாகவுள்ள பிரதிகளையும் விநியோகிக்க நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன.

e. கண்ணாடிகளைக் கொள்வனவு செய்தல்
மீதியாகவுள்ள இருப்புக்கள்

பட்டியலிட்டவாறு சத்திர சிகிச்சைகள் நடைபெறாததால் கண்ணாடிகளை விநியோகிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன. நோயாளிகள் கண் அழுத்தம், நீரிழிவு மற்றும் ஏனைய வியாதிகளினால் பாதிக்கப்பட்டதனால், சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட்டன.
சத்திர சிகிச்சைகள் ஒத்திவைக்கப்பட்டதன் காரணமாக, நோயாளிகள் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள வருகை தராதனால், அக் கண்ணாடிகளை நிறுவனத்தில் இருப்பில் வைக்க வேண்டி ஏற்பட்டது.

f. முதியோர் அடையாள அட்டைகளை வழங்கல்

2011 ஜனவரியிலிருந்து டிசெம்பர் 31 வரை 35358 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. புதிய செயலாளரின் ஒப்பத்துடன் புதிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவிருந்ததால், 2011 நவம்பரில் 50000 அடையாள அட்டைகள் அச்சிடப்படவிருந்தது.

g. விழிப்புணர்வு, பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

1. 2011ம் வருடத்தில் 24 விழிப்புனர்வு, பயிற்சித் திட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டது. இவ்வாறான 24 நிகழ்ச்சித் திட்டங்களையும் இரு காரணங்களுக்காக முழுமையாக நடத்த முடியவில்லை. திறைச்சேரியினால் நிதிகளை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் இதற்கான ஒரு காரணமாகும். இவ் விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரி 2013.12.03 ஆந் திகதி சத்திர சிகிச்சைக்கு உட்பட்டதும் தாமதத்திற்கு ஏதுவானது. எவ்வாறாயினும், 18 நிகழ்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு 908 முதியோருக்கு கல்வி புகட்டப்பட்டன.

2. இரண்டு முதியோர் உபசரணை பணியாளர் வேலை அமர்வுகளை நடத்த திட்டமிட்டிருந்தாலும், திறை சேரியிலிருந்து நிதிகள் திட்டமிட்டவாறு வழங்கப்படாததால் இரண்டு வேலை அமர்வுகள் மாத்திரமே நடத்தப்பட்டது.

3. 2007 லிருந்து 2011 வரை, 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இவைகளில் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தினை இந் நிலையத்தின் அனுசரணையுடன் மத்திய மாகாண சபையினால் நடத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு பணியாளர்கள் மத்திய மாகாணத்திலிருந்தே அமர்த்தப்பட்டார்கள். இந் நிறுவனத்தினாலும் 100க்கு அதிகமான பணியாளர்கள் சேவை வழங்க அமர்த்தப்பட்டார்கள். பிராந்திய மட்டத்தில் 77 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த திட்டமிட்டிருந்தாலும், இவ் இலக்கினைத் தாண்டி 135 நிகழ்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

4. இளைப்பாறலுக்கு முன்னரான தயார்படுத்தும் 04 வேலை பட்டறைகள் நடத்த திட்டமிட்டிருந்தாலும், திறை சேரி இதற்கு போதுமான நிதியினை வழங்காததினால் அவ்வாறான எவ்வித வேலை அமர்வுகளும் நடத்தப்படவில்லை.

4.2 ஆற்றல்களற்ற முகாமைத்துவம்

(a) நந்தா ஜயசிங்க முதியோர் இல்லத்தின் தானசாலைக்கான மண்டப கட்டுமான வேலைகள் வட மத்திய மாகாண சமூக சேவை திணைக்களத்தினால் மேற் கொள்ளப்பட்டது. இதற்கான ஒப்பந்தங்கள் ஒப்பமிடுவது அடங்கலான சகல அலுவல்களும் இவ் இரு பகுதியார்களிடையிலேயே இடம் பெற்றன.

(b) கிரிந்த புகுல்வெள்ள பிரதேச செயலாளரின் வேண்டுகோள்படி, கிரந்தையிலுள்ள கருணாரத்ன முதியோர் இல்ல நிர்மாண வேலைக்காக வழங்கப்பட்ட நிதியில் மீதியாகவுள்ள பணத்தினை, அம் முதியோர் இல்லத்தின் வடிகால் கட்டமைப்பினைக் நிர்மாணிக்கப் பயன்படுத்துமாறு அனுமதி வழங்கப்பட்டது.

4.3 ஆற்றல்களற்ற செயற்பாடுகள்

(a) தென்பகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசேட பரிபாலனைச் சபையினை நியமிக்க நீதிச் சேவைகள் ஆணைக்குழு அனுமதி அளித்திருந்த போதும், உறுப்பினர்களுக்கு செலுத்த அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவு வீதம் போதாமையினால் அவ் உறுப்பினர்களை நியமிக்க முடியவில்லை.

(b) 2011ம் வருட இறுதியில் கண்ணாடிகளுக்காக தேவையானோர் விண்ணப்பித்திருந்தாலும், திறைச்சேரியினால் இதற்காக நிதி வழங்கப்படாமையினால் அவர்களுக்கு கண்ணாடிகளை வழங்க முடியவில்லை. இவ் விண்ணப்பதாரிகளை ஆவணப்படுத்தப்பட்டு அடுத்த வருடத்தின் முதல் காலாண்டில் அவர்களுக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

4.4 சிக்கனமற்ற நடவடிக்கைகள்

முதியோருக்கான அடையாள அட்டையினைத் தயாரிப்பதில், முத்திரையளவான ஒரு புகைப்படத்திற்கு ரூபா 25/= செலவானதுடன், ஒரு நாள் சேவை அல்லது வேறு விசேட நிலைமைகளில் ஒரு புகைப்படத்திற்கு ரூபா. 40/= லிருந்து ரூபா. 50/= வரையும் செலுத்தப்பட்டது. மிகவும் தொலைத்தூரமான இடங்களில், ஒரு நாள் சேவையின் கீழ் நடமாடும் சேவை நடத்தப்பட்ட போது, இரண்டு (02) புகைப்பட்ங்களுக்கு ரூபா. 100/= வீதம் வழங்கப்பட்டது. இக் காரணங்களில் ஒன்று - புகைப்படக்காரர்களை அணுகுவதில் முகம் கொடுக்கும் தடங்கல்களாகும். மற்றையது அப் புகைப்படக் கலைஞர் தமது சகல உபகரணங்களையும் புகைப்படங்கள் எடுக்கும் இடத்திற்கு கொண்டு செல்வதிலிலுமுள்ள இடையூறுகளுமாகும். இந் நிகழ்வு மிகவும் அரிதாகவே இடம் பெறும். எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமையைத் தவிர்ப்பதற்காகத் தகுந்த செயற் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

4.5 நன்கொடையளிக்கப்பட்ட சொத்துக்கள்

இந் நிறுவகத்திற்கு புலத்பிட்டிய, ஹோமாகம, கம்பஹா ஆகிய இடங்களில் நன்கொடையளிக்கப்பட்ட சொத்துக்களை சட்டபூர்வமாக பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5.0 கணக்குகளைப் பேணலும், நல்லாட்சியும்

5.1 கூட்டாண்மைத் திட்டம்

2012 லிருந்து 2016 வரைக்கான கூட்டாண்மைத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

5.2 செயற்பாட்டுத் திட்டம், நிறைவேற்ற வேண்டிய வேலையின் எண்ணிக்கை, பரிபால சபையால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆகியனவற்றில் துல்லியமாகக் கணக்கிட முடியாதவைகளைச் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. ஆயினும் 2012ம் வருடத்திற்கான செயற்பாட்டுத் திட்டத்தில் இது தொடர்பான தகவல்கள் முறைமையாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

5.3 உள்ளகக் கணக்காய்வு

2012 ஆம் வருடத்திற்கான உள்ளகக் கணக்காய்வினை நடத்த அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5.4 முதியோருக்கான பொதுவான போக்குவரத்துச் செலவில் 50% னை குறைத்தல்

1. போக்குவரத்துச் செலவுகளை 50% ஆல் குறைப்பதற்கு அமைச்சரவைப் பத்திர இல. 06/0678/227/019 மூலம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தாலும், புகையிரத பருவச் சீட்டுக்களை வழங்குவதற்கான நிதியினை ஓதுக்கீடு செய்ய திறைச்சேரி இணங்காதபடியால், இத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

2. முதியோர்கள் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில், உரிய சாலைகளில் முழுப் பயணச் செலவில் 50% னைச் செலுத்தி பயணச் சீட்டினை கொள்வனவு செய்து பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் மட்டுமே இவ்வாறு பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டதால் ஏற்பட்ட கஸ்டங்கள் காரணமாக, இத் திட்டமும் தற்பொழுது செயற்படாமலிருக்கின்றது.

5.5 தகவல் முறைமையினைத் தயாரித்தல்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திலிருந்து முதியோர் சனத்தொகை தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாதலால், இந் நிறுவகத்திறகென தனியானதொரு தரவுத் தளத்தினைத் தயாரிப்பது அவசியமற்றதாகும்.

5.6 பாதீட்டு கட்டுப்பாடு

(a) இந் நிறுவகம் வருமானம் ஈட்டுமொரு நிறுவகமல்ல. இது திறைச்சேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைப் பயன்படுத்தி செயற்படுகின்றது.

(b) முறைமைகளும், கட்டுப்படுத்தலும்

கீழ்க் குறிப்படப்படும் பகுதிகளுக்கு விசேட அவதானத்தைச் செலுத்தி நடவடிக்கை எடுக்க தீர்மானமிக்கப்பட்டுள்ளது.

a. கண்ணாடிகளை வழங்குதல்

b. சிரேஸ்ட குடிமக்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

c. செவிப்புலச் சாதனங்களை வழங்குதல்

ஜெ. கிருஸ்ணமூர்த்தி
பணிப்பாளர்

## 2011 ஆண்டிற்கான ஒதுக்கீட்டினை விபரப்படுத்தல்

| விபரம் | தளபாடம் மற்றும் உபகரணங்கள் 15% | இயந்திரங்கள் 20% | வாகனங்கள் 10% |
|---|---|---|---|
| 2010.12.31 இல் செலவு குறைக்கப்பட்டது பூரண கொடுப்பனவு எம்மால் செய்யப்பட்ட செலவு | 7,168,278.47<br>1,150,658.59 | 1,853,809.00<br>1,119,797.00 | 2,850,000.00<br>- |
| சேர்க்கப்பட்ட 2011 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டவை | 6,017,619.88<br>447,094.00 | 734,012.00<br>448,000.00 | 2,850,000.00<br>4,600,000.00 |
| 2011 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டிலிருந்து செலவு செய்யப்பட்டவை<br>சேர்<br>தளபாடம் - 2005 கொள்வனவு செய்யப்பட்டவற்றின் மிகுதி (626116.59 - 563504.88) | 6,464,713.88<br>15%<br>969,707.08<br>62,611.71 | 1,182,012.00<br>20%<br>236,402.04 | 2,850,000.00<br>10%<br>285,000.00 |
| **2011 செலவு செய்ய்பபட்டவை** | **1,032,318.79 236,402.40 285,000.00** | | |

* **டொயொடா யாரிஸ் மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது 2011.11.30 திகதியாகும். ஆகையால் 2011 ஆம் ஆண்டு செலவில் இடப்படவில்லை.**